தென்றல்

“போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !”

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கைஉட்பட) விலை இரண்டணா. |வெளி நாடு: மூன்றணா. அலுவலகம்: ‘தென்றல்’ சென்னை—6

மலர் 1 | சென்னை | 26—3—1955 | சனிக்கிழமை | இதழ் 39

1781-ல் அவர் கண்ட காட்சிகள் !

[டச்சுக்காரர்கள் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு தென்னிந்தியாவின் சில பிரதேசங்களை வசப்படுத்திக்கொண்டு ஆட்சியும், வாணிபமும் நடத்திவந்தார்கள். அவர்களின் வர்த்தக நிலையமான டச்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி சென்னையிலிருந்து தெற்கே 50 மைல் தொலைவிலுள்ள **சத்திரம்** என்ற ஊரிலிருந்தது. அக்கம்பெனி நிர்வாகி **ஜாக்கஸ் ஹாப்னர் (Jacques Haafner)** என்பார் வாணிபம் சம்பந்தமாக 1781ல் பீமண்ண பட்டிணத்திலிருந்து சென்னைக்கு பல்லக்குமூலம் பிரயாணம் செய்தார். அவர் எழுதிவைத்த அந்தப் பிரயாணக் குறிப்பிலிருந்து சுவையான சில குறிப்புகளைத் தருகிறோம்.]

விசாகப்பட்டிணத்தில் எனக்கு வேலையிருந்ததால் நாலைந்து தினங்கள் தங்கிவிட்டேன். பிறகு புறப்பட நினைக்கும்பொழுது, என் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவருக்கும் எனக்கும் நாகபட்டிணத்தில் பழக்கம் ஏற்பட்டது. அவருடைய வேண்டுகோள்படி இன்னும் சில தினங்கள் தங்கிவிட்டேன். அதனால் அவசரமாக ஊர்போய்ச் சேரவேண்டும். கடல் வழியாக தோணியில் செல்லலாம். அல்லது நாட்டுப் படகுகளில் செல்லலாம். ஆனால் சில சமயம் அது ஆபத்தான பயணமாகிவிடும். கடற்கரை ஓரமாக குதிரையிலோ, மாட்டு வண்டிகளிலோ புறப்படலாம். அல்லது நடக்கலாம். ஆனால், நான் பல்லக்கில் புறப்படுவதென்று தீர்மானித்தேன். பல்லக்கில் சென்றால், இடையிடையே சாலைகள் இல்லையானாலும், ஆறுகளைக் கடக்க வேண்டியிருப்பினும் ஒற்றையடிப் பாதைகளிலும் சுலபமாகச் செல்லலாம். மசூலிப்பட்டிணம் வழியாக சென்னை செல்வதென்று முடிவு செய்தேன்.

விசாகப்பட்டிணம் ஆங்கிலேயருக்குச் சொந்தம். ஒரு பெரிய ஆறு கடலில் கலக்கும் இடத்தில் இந்த நகரம் இருக்கிறது. இதைச் சுற்றிலும் நான்கு கோட்டைகளும் 18 பீரங்கிப் பட்டாளங்களும் இருக்கின்றன. இங்கு வெயில் அதிகம். பகல் வேளையில் சூடு பொறுக்க முடியாது. இங்கே கப்பல்கள் கட்டப்படுகின்றன. ஆடைகள் நெய்யப்படுகின்றன.

இந்த பெயர் பெற்ற கைத்தொழில், தந்தத்தால் செய்யப்படும் வெற்றிலைப்பெட்டி தான். கடற்கரைப் பட்டிணங்களில் எங்குமே இவ்வளவு நேர்த்தியான, தந்தத்தால் செய்த பொருள்கள் கிடைப்பதில்லை. ஆபரணங்கள், மற்றும் பல பொருள்கள் அழகாக இங்கு செய்யப்படுகின்றன. பெட்டிகளில், இணைப்பே தெரியாது. வேலைப்பாடு திறமையாக, அபூர்வமாகஇருக்கும். விசாகபட்டிணம் செல்கிறவர்கள், நண்பர்கள், சுற்றத்தார்களுக்கு வெற்றிலைப்பெட்டி வாங்காமல் திரும்ப மாட்டார்கள். நானும் எனனுடைய நண்பருக்கு ஒரு பெட்டி வாங்கிக்கொண்டேன்.

நான் ஏறி இருந்த பல்லக்கை நான்கு கூலிகள் சுமந்து வந்தனர். விசாகப்பட்டிணத்தைவிட்டுப் புறப்பட்டதும், சமதரையில்லாத-கல்லும் முள்ளும் நிரம்பிய பாதையில் என்னுடையகூலிகள்மிகவும்சிரமத்துடன் நடந்து சென்றனர். அன்று



பகல் வேளைக்குப் பிறகு ஒரு அழகான கிராமத்தை அடைந்தோம். பூத்துக்குலுங்கும் மரங்களும், வெற்றிலைத் தோட்டங்களும் கிராமத்தைச் சூழ்ந்திருந்தன.

பகல் சாப்பாட்டிற்கு அந்தக் கிராமத்தில் தங்கினோம். பாலும், முட்டையும், கோழியும், பழங்களும் மலிவான விலைக்கு ஏராளமாகக் கிடைத்தன. இந்தக் கிராமத்திலுள்ள சத்திரம் அழகாகக் காட்சி தந்தது. சமீபத்தில்தான் இந்தச் சத்திரத்தைக் கட்டியிருக்கிறார்கள். நான் அங்கு சென்ற சமயம், ஒரு இந்து சோதிடன் அங்கே தங்கியிருந்தான். எனக்குச் சோதிடம் சொல்லவேண்டுமென்று அவன் ஆசைப்பட்டான். அவனிடம் பேசுவதில் கால்மணி நேரம் ஆனந்தமாகக் கழியட்டுமென்று நினைத்து, அதற்குச் சம்மதித்தேன்.

இந்த சோதிடர்கள் ரூபாய் கொடுத்தால் வாங்கிக்கொள்ளமாட்டார்கள். அரிசி, துணிக்குத்தான் ஆசைப்படுவார்கள். அதையும் உடனே உபயோகப்படுத்துவதில்லை. ஒன்பதுநாட்கள் கட்டிவைத்திருந்து பிறகுதான் உபயோகப்படுத்துகிறார்கள். என்னுடையசோதிடன் கொஞ்சம் புத்திசாலி. என்னைப் பார்த்துக்கொண்டே சுருக்கமாகச் சொல்லி முடித்தான். நடந்ததைச் சரியாகச் சொன்னான்.

பகல் உணவு முடிந்ததும் பல்லக்கில் படுத்துத் தூங்கிவிட்டேன். என்னை எழுப்பவேண்டாமென்று நினைத்த கூலியாட்கள், நான் தூங்கும்போதே பல்லக்கைச்சுமந்து சென்றார்கள்.

பிறகு வயல் வெளிகளையும், புகையிலைத் தோட்டங்களையும், சில குக்கிராமங்களையும் கடந்துசென்றோம். ஆங்காங்கே கோயில்களும், குளங்களும், அழகான சத்திரங்களும் காணப்பட்டன.

இந்தத் தேசத்தில்,புகையிலைக்கு இப்பகுதிதான் புகழ்வாய்ந்தது. ஏராளமான சுருட்டுகள் இங்கு உற்பத்தி செய்து அனுப்பப்படுகின்றன. என்னிடம் இருந்த சுருட்டுகள் குறைந்துவிட்டதால் மூன்று ரூபாய் கொடுத்து ஆயிரம் சுருட்டுகள் வாங்கிக்கொண்டேன்.

பிறகு பல கிராமங்களைக் கடந்து சென்றோம். வழியில் பனைமரங்கள் ஏராளமாக நெருங்கி வளர்ந்து நின்றன. வழியை மறைத்து ஓலைகள் நீண்டிருந்தன. இந்த மரங்களில் பழம் பழுப்பதே இல்லை. ஆனால் அடிமரங்களை உத்தரங்களுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.

இரண்டு மணிக்கு தர்மபுரிக்கு வந்து சேர்ந்தோம். அந்த ஊர் கோயில் தெய்வத்தின் பெயர் தர்ம தேவன். அதனால்தான் ஊருக்கும் அந்தப் பெயர் வைத்தார்களாம்.

அந்த ஊர் சத்திரத்தில் ஒரு சந்நியாசி மட்டும் இருந்தான். பிரயாணிகளுக்கு மோர் கொடுப்பது அவன் வேலை. பிரயாணிகள் இரு கைகளையும் ஏந்த, ஒரு பித்தளைப் பாத்திரத்தால் மோர்ஊற்றுகிறான். அவர்கள், கையில் வாங்கிக் குடிக்கின்றனர்.

மாலை ஐந்து மணிக்கு கடற்கரை தென்பட்டது. சிறிதுதூரம் சென்றதும் ஒரு சிறிய கிராமத்தை அடைந்தோம். அன்று இரவு அங்கே தங்குவதென்று தீர்மானித்தேன். அது மீன் பிடிப்போர் வாழும் கிராமம். அங்கு சத்திரமோ, சாவடியோ, ஒரு மரமோ இல்லை. அகண்ட ஆகாயமும்,பரந்த கடலும் கடற்கரை மணற் பரப்பும், பல குடிசைகளுமே அங்கு காணப்பட்டன.

மணற்பரப்பும், கடல்காற்றும், வர்ண ஓவியங்கள் காட்டும் வானமும் என்னைப் பரவசப்படுத்தின. அத்துடன், மாலையில் கரைவந்து சேரும் மீன் பிடிப்போரிடமிருந்து புதிய மீன்கள் கிடைக்குமல்லவா?

சிறிது நேரத்தில் ஏராளமான படகுகள் கரையை நோக்கிவந்தன. நான் கடற்கரையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். படகோட்டிகள் பாடும் இன்னிசை பக்கத்திலுள்ள மணற் குன்றுகளில் எதிரொலித்தது. ஆரவாரம் செய்யும் அலைகளை எதிர்த்து கட்டுமரங்களையும் படகுகளையும் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர் ஆடவர்கள்:

ஆடவர்களைக் கண்டதும் அந்தக் கிராமத்துப் பெண்கள், பிள்ளைகள் அனைவரும் திரண்டு வந்துவிட்டனர் கடற்கரைக்கு.படகோட்டிகளைக் கரையில் நின்றவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

இன்னும் பலர் பிடித்துவந்த மீன்களை வாங்கிச் செல்வதற்காக வந்திருந்தனர். நான்கூட ஐந்து பிரஞ்சுக்காசுகளுக்கு மீன் வாங்கிக் கொண்டேன். மீன்களைப் பிடித்து வந்த உடனே அவற்றை விற்றுவிடுவார்கள். இல்லையானால் அவை கெட்டுப்போய்விடும். விற்கப்பட மீன்களை உப்புக் கலந்து வெயி உலர்த்தி பாடம் செய்கிற அதற்குக் கரவாடு என்று

(3-ம் பக்கம் பா

சட்டம், ஆக்கிவைத்த இயந்திரமாக இயங்குவது மட்டும் முழுநீதிக்கும் வழி வகுக்காது. சட்டம், தர்மத்துக்கும் கட்டுப்படவேண்டும். இந்தக் கருத்தை, "சட்டம் தர்மத்துக்குக் கட்டுப்படவேண்டாம் என்பது நண்பரின் வாதமா?" என்ற ஒரு கேள்வியில் கூறிற்று, அறிஞர் அண்ணு அவர்களின் 'வேலைக்காரி.'

செய்யப்பட்ட குற்றத்தின் தரத்தை நிர்ணயித்து தண்டனை கொடுப்பது மட்டும் போதாது; அந்தக் குற்றம் புரியப்படக் காரணமாயிருந்த சூழ்நிலை எது என்பதிலும் கவனம்செலுத்தவேண்டும்.

கொலை செய்தான் - குற்றம்; கொலை செய்யக் காரணமாயிருந்தது, ஆத்திரம்; ஆத்திரத்திற்குக் காரணம், தன் மனையாளைப்பிறன் கெடுக்கக் கண்டது-இதிலே சட்டம், காரணத்தை ஆராயமுடியாது; குற்றத்தின் தரத்தைத்தான் ஆராயமுடியும். அப்படி ஆராய்ந்தால், கொலையாளிக்குக் கொடுந்தண்டனை விதிக்கும்படித்தான் சட்டம் கூறும். இதன்படி 'மனையறங்கெட்டு, மனநலங் கெட்டு, வேதனைப்பட்ட குற்றவாளி, சிறைக்கும் சென்று மூன்ருவது தண்டனை அடைகிருன். சட்டத்தில், சூழ்நிலையை வாதத்திற்கு எடுத்துக் கொள்ள முழு வழியும் இல்லாததால், ஒருவன் மூன்றுவகைத் தண்டனைகளை அனுபவிக்க நேருகிறது. ஆனுல், வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு, சூழ்நிலை கண்டு தண்டனையைக் குறைக்க அதிகாரமிருக்கிறது. தர்மக் கண்ணேட்டத்தோடு, நீதிபதிகள் வழக்கை ஆராய்ந்தால் இரண்டாவது குற்றத்திற்கு அடிப்படையான முதற் குற்றத்தைப் புரியவே பலர் அஞ்சுவார்கள். சுருங்கச் சொன்னுல், தர்மக் கண்ணேட்டத்தோடு வழக்கை ஆராய்ந்து, தீர்ப்பிலே, முதற் குற்றத்திற்குக் காரணமாயிருந்தவனை வன்மையாகக் கண்டித்து, இரண்டாவது குற்றம் புரிந்த கொலைகாரனுக்கு லேசான தண்டனை கொடுக்கும் நீதிபதி, அடிப்படைக் குற்றமே நடவாமல் தடுத்துவிடுகிருர்.

நீதிபதி சோமசுந்தரம் அவர்களின் சில தீர்ப்புகளைப் பார்க்கும்போது, மேற்கண்ட எண்ணம்தான் எனக்குத் தோன்றிற்று. முன்பு ஒருமுறை, ராதாவின் நாடகத்திற்கு ஒரு ஊரில் தடைவிதித்த அசம்பாவிதத்தை, நீதிபதி சோமசுந்தரம் வன்மையாகக் கண்டித்து, "காங்கிரஸ்காரர்கள் கலவரம் செய்வார்கள் என்பதற்காக நாடகத்தைத் தடுக்கக்கூடாது. காங்கிரஸ் காலிகளைத் தடுக்கவேண்டும்." ...ன்று துணிகரமாகத் தீர்ப்பளித் ... நண்பர்களுக்கு நினைவிருக் ... நீதி நீதியாகவே இயங்க ...ம் என்பதில் உள்ள அக்கறைதான், அவரது மேற்படித் தீர்ப்புக்குக் காரணம். ஆளும் கட்சியில் இருக்கும் காரணத்தால், அக்ரமக்காரர்கள், அடுத்த கட்சிக்காரனை வாழவே விடாமல் தடுக்கக்கூடாது; தடுக்கமுடியாது என்பதை நீதிபதி அதில் வலியுறுத்தினுர். இதனுல், சர்வாதிகார ஆட்சியில் வெறுப்படைந்த பொதுமக்கள், தங்களைக் காப்பாற்ற ஒரு உயர்நீதி மன்றம் இருக்கிறது என நிம்மதியடைந்தார்கள். உயர்நீதிமன்றம் ஒழுங்கான நீதி தரும் என்கிற உறுதிகொண்டார்கள்.

அடுத்து சமுதாய வாழ்விலே, தனி நபர்களால், மற்ருெரு தனி நபருக்கு எற்படுகிற வேதனையை நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், தனது சமீபத்திய தீர்ப்புகள் சிலவற்றில் கூறியுள்ளார். இவற்றிலே, சட்டப்படிகுற்றவாளி என்று கருதப்பட்டவர்களின் தண்டனைக் காலத்தைக் குறைத்துள்ளார் - தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு. இது மிக உன்னதமான நீதியாகும் என்பதை அறிவுடையோர் யாவரும் ஒப்புக்கொள்வர்.

"கொன்றுன்-குற்றவாளி, அடித்தான்-குற்றவாளி" என்றுமட்டும் போய்விடக்கூடாது; கொன்றதற்கும் அடித்ததற்கும், கொல்லப்பட்டவனும் அடிவாங்கியவனும் செய்த தீச்செயல்கள்தான் காரணம்-அந்தச் செயல்கள் சமுதாய ஒழுக்கத்தை பாதிப்பவை. ஆகவே சட்டப்படி குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டு தண்டனையை வெகுவாகக் குறைத்தார், அவர்.

"வடஆற்காடு மாவட்டம், தச்சன் பேட்டையைச் சேர்ந்தவர் தஞ்சகவுண்டர். அவர் மனைவி பெயர் கன்னியம்மாள். வயது சுமார் பதினெட்டு. அவளை, அண்ணுமலை என்பவர் கெடுத்தார். அதனுல் தஞ்சகவுண்டர் அண்ணுமலையை அடித்து, இரண்டு பற்களை உதிர்த்தார். படுகாயம் விளைவித்தார். இதனைத் தொடர்ந்து, தஞ்சகவுண்டர்மீது போலீசார் வழக்குத் தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த வேலூர் செஷன்ஸ் நீதிபதி, தஞ்சகவுண்டருக்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்தார். அதை எதிர்த்து, தஞ்சகவுண்டர் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்தார். நீதிபதி சோமசுந்தரம், தஞ்ச கவுண்டர் அனுபவித்த, குறைந்தகால சிறைத் தண்டனை போதுமென்று கூறி அவரை விடுதலை செய்து, தமது தீர்ப்பில், பின்வருமாறு குறிப்பிட்டார். "தஞ்ச கவுண்டனின் குடும்ப வாழ்வில், அண்ணுமலை தலையிட்டது, கீழ்த்தரமான செயல். நல்ல தம்பதிகளின் வாழ்வை அது நாசமாக்கிவிட்டது. அண்ணுமலையின் முப்பத்திரண்டு பற்களையும் உதிர்த்தால்கூடத் தகும்! அவ்வளவும் வேண்டியதே!"

இத்தகைய துணிகரமானதும், நியாய வாதிகள் மகிழக்கூடியதுமான தீர்ப்புகளை நாம் அதிகம் காணமுடிவதில்லை. "முப்பத்திரண்டு பற்களையும் உடைக்கவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டதானது, சமுதாய ஒழுக்கத்தில் அவருக்குள்ள பற்றுதலைக் காட்டுகிறது. இதுபோன்றே மதுரைப் பகுதி வழக்கொன்றிலும் நீதிபதியவர்கள் தீர்ப்பளிக்கும்போது, "தன் மனைவியைக் கெடுத்தவனை, குற்றவாளி கொலை செய்தார். பரவாயில்லை. என் அனுதாபம் இவர் மீதுதான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதி சோமசுந்தரம் அவர்களின் இந்தத் தீர்ப்புகள், மனிதத் தன்மை உடைய யாருக்கும் பெருத்த மகிழ்வைத்தரும் என்பதில் ஐயமில்லை. இதுபோன்ற மற்ற கீழ்க்கோர்ட் நீதிபதிகளும் தர்மக் கண்ணேட்டத்தையும் சட்டத்தோடு பிணைத்து முடிவுகட்டுவார்களானுல், அடிப்படைக் குற்றங்களே இல்லாமல் போய்விடும்.

பசியால் திருடியவன், வேலையில்லாததால் தற்கொலைக்கு முயன்றவன், கடன் தொல்லையால் சாகச் சென்றவன், என பல ரகங்களாகக் கிடக்கும் குற்றவாளிகளுக்கு, தர்மம் ஒட்டிய சட்டபூர்வமான நீதி கிடைக்க, கீழ்க்கோர்ட் நீதிபதிகளும் வழிசெய்யவேண்டும்.

ஆபாசப் பத்திரிகை ஆசிரியர்கள் இருவருக்கு கீழ்க்கோர்ட் அபராதம் விதித்ததை எதிர்த்து, மேற்படி ஆசிரியர்கள் இருவரும் உயர்நீதி மன்றத்திற்கு அப்பீல் செய்துகொள்ள, அங்கே நீதிபதி, தண்டனை போதாது, சிறைக்கு அனுப்பியிருக்கவேண்டும் என்ருர்! அதுவும் நீதிபதி சோமசுந்தரம் அவர்களின் தீர்ப்புத்தான். இனி ஆபாசப் பத்திரிகைகளை எதிர்த்து வழக்குப் போடுகிறவர்கள், இந்தத் தீர்ப்பையும் சாட்சியமாகக் காட்டலாம்.

சுருக்கமாக, குற்றத்தின் தரம் பார்ப்பதோடு, காரணத்தையும் சேர்த்து கவனிப்பது, சமுதாய அமைப்பையே அழகுபெறச் செய்யும் என்பதை, நீதிபதி சோமசுந்தரம் அவர்களின் தீர்ப்புகள் கூறுகின்றன. இதை எல்லா நீதிபதிகளும் பின்பற்றினுல், நாட்டில் குற்றம் பிறக்கவே முடியாது.

புலவர் குழந்தை காட்டும்

தமிழணங்கு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இலையி லைமரு வாதுனை நான்விடே னென்ன
வலிய வீர்க்கமான் உயிர்கொடுத் திழுத்தொளி வளைக்கை
மெலிய விற்கையின் பிடிப்பினை யறவிடு வித்துப்
புலியின் வாய்தவிர் மானெனப் பொருக்கெனப் போனுள்.

பொருக்கென் ருங்கவள் பெயர்தலு மறிவிலாப் புல்லன்
சுருக்கென் றெம்பியைக் குறுகியித் தொன்னிலம் புரப்பாள்
இருக்கை நீத்ததோ செல்கிரு ளெம்பிநீ யவளை
உருக்கு லைத்துவா! என்னவப் பாவியும் ஓடி.

சென்று நில்லடீ! என்றிடத் தேவியுந் திரும்பி
நின்று பார்த்தனள்; தடுத்தனள்; தடுப்பவன் நீயார்?
என்ற தட்டியே கேட்கவே, சடக்கென விழிஞன்
மன்ற லங்குழல் பற்றியே வயிற்றினி லுதைத்தே.

உண்ட மைவிழி தனை நிலந் தள்ளிவா ளுருவக்
கண்டு கோவெனப் புலியின்வாய் மானெனக் கதறிக்
கொண்டு மேலெழ முனைந்துமே திமிறிடக் கொடியோன்.
அண்டி வன்னிலத் துடலுரிந் திடவிழுத் தந்தோ!

இரும்பு போன்றநெஞ் சிழிதகை தேவியி னிணைக்கோங்
கரும்பு தோன்றநா ணின்றிமே லாடையை யவிழ்த்துக்
கரும்பு போன்றமென் கைகளைப் பின்னுறக் கட்டி
நரம்பு தோன்றிட இழுத்திழி காலைமேல் நாட்டி.

செருக்கெ டுத்திவண் திரிதரும் இளநலச் சிறுக்கி!
உருக்கு லைத்துன தழகினை யப்புற மோட்டிச்
சரிப்ப டுத்துவேன் பாரென வேதறு தலையும்
பருக்கெ னத்திக முறுப்பினைத் தீக்கையால் பற்ற.

தீக்கைப் பற்றுவிட் டோடிட வெழுந்தமிழ்த் திருவைத்
தூக்கித் தூக்கிப்போட் டுதைத்துதைத் துயிர்துடி துடிக்க
மூக்குங் காதுமட் டோ......கண்களா முகையும்
போக்கி ஆயிடை நின்றுமே சென்றனன் பொல்லான்.

துன்று பூங்குமிழ் வள்ளைகோங் கரும்பினைத் துமித்தே
கொன்றி லாதுசென் றண்ணனைக் கூடினன்; கொடியும்
கன்றி யோவென நிலத்திடைப் புரண்டுமே கதற
மன்ற லங்குழல் மாதர்கேட் டோடியே வந்து.

குருதி சோரிடுஞ் சினைக்குறை யோடுபூங் கொம்பை
மருத மேவிய புனமயி லாமென மண்ணில்
சொரியுஞ் சேற்றிடைக் கண்டவர் மனந்துடி துடித்துக்
கரிய வென் னெனத் தேவியு முற்றது கழற.

ஐயை யோவென முகத்தினி லறைந்துகொண் டழுது
கையை யோவென அவிழ்த்துமென் மலர்க்கையின் கட்டை
வையை யோவென வைத்தவ ரொருத்தியின் மடிமேல்
நையை யோவெனக் கதறியே யழுதுளம் நைவார்.

ஏங்கு வார்தம திறைவியை மலர்க்கையா லெடுத்துத்
தாங்கு வாரமு வார்விழு வாருளந் தளர்வார்
தீங்கு செய்தவப் பாவிகள் தொலைகெனச் சினப்பார்
பாங்கி லேமுனை நீங்கினே மெனப்பதை பதைப்பார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் சாப்பிடும் சால்மனைவிட, கரவாடு எவ்வளவோ நன்ருகவும் ருசியாகவும் இருக்கிறது என்பதை, ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். பிறகு அந்த மனிதர்கள் வலையை விரித்து உலரவைத்தார்கள். பலர் தோணிகளைக் கரைமீது தள்ளினுர்கள். அன்று இரவு அந்த மணற்பரப்பிலேயே நானும் தூங்கிவிட்டேன்.

மறுநாள் முழுவதும் பிரயாணம் செய்தோம். வழியில் அழிந்துபோன ஒரு ஊரைப் பார்த்தேன். ஒரு காலத்தில் அது முக்கிய நகரமாக விளங்கியிருக்கவேண்டும். உடைந்த கற்களும் அழிந்துபோன கோயில்களும், பாழடைந்த குளங்களும் வீடுகளும் அங்கே காணப்பட்டன. அங்கேயே அன்று இரவைக் கழித்தோம். மறுநாள், இடையில் குறுக்கிட்ட ஒரு ஆற்றைக் கடந்து பிரயாணம் செய்தோம். காடு அடர்ந்த ஒரு இடத்திற்கு மாலை நான்கு மணிக்கு வந்து சேர்ந்தோம். அங்கே சுமார் முப்பது ஆண், பெண் குழந்தைகள் அடங்கிய ஒரு கூட்டத்தைக் கண்டோம். அவர்கள் அந்தக் காட்டைக்கடந்து செல்வதற்கு, தயங்கிக்கொண்டிருந்தார்கள்.

அந்தக் காட்டில் இரு பெரிய கொலைஞர்கள் மறைந்து வாழ்கிறுர்களாம். அவர்களுக்குப்பயந்து பிரயாணிகள் அதன் வழியாகச் செல்வதில்லையாம். அந்தக் கொலைஞர்களைப் பற்றிய பல கட்டுக்கதைகள் அப்பகுதியில் வழங்கின. அதனுல்தான் அந்தக் கூட்டத்தினரும் தயங்கினர். அவர்களில் ஆண்கள் அனைவரும் வாள், கத்தி, ஈட்டி, கம்பு முதலியன வைத்திருந்தார்கள். என்னிடம் துப்பாக்கியும் பிஸ்டலும் இருந்தன. அத்துடன் நான் ஒரு ஐரோப்பியன். அதனுல் அவர்கள் என்னைத் துணைப்பிடித்தார்கள்.

மறுநாட்காலை, நீட்டிய துப்பாக்கியுடன் நான் முன் நடந்தேன். அந்தப் பிரயாணிகள் கூட்டம் என் பின்னுல் வந்துகொண்டிருந்தது. பலமான்கள் அங்குமிங்கும் துள்ளித் திரிவதைக் கண்டோம். குரங்குகள் மரங்களின்மீது உட்கார்ந்து பல்லைக்காட்டிப் பயமுறுத்தின. பறவைகள் பல மரங்களில் கூடுகள் கட்டியிருந்தன. பத்திரமாக அந்தக் காட்டைக் கடந்தோம். அந்தக் கூட்டத்தினர் எனக்கு நன்றி தெரிவித்துப் பிரிந்தார்கள்.

மீண்டும் பல கிராமங்களைக் கடந்தோம். அங்கெல்லாம் தென்னஞ்சோலைகளும், வெற்றிலைத்தோட்டங்களும் பனைமரங்களும் புளியமரங்களும் கிராமங்களைச் சூழ்ந்திருந்தன.

பிறகு கிருஷ்ணுநதியின் ஒரு பகுதியைக் கடந்தோம். மறுநாள் சக்கர்நாயக்கபுரத்தை அடைந்தோம். அங்கு சில நாட்கள் தங்க வேண்டியவேலைஎனக்கு இருந்தது.

எனக்குத் தெரிந்தவர் ஒருவர் அங்கேயிருந்தார். நான் அவரைக் கடைசியாகப் பிரிந்த பிறகு அவருடைய மனைவி இறந்துவிட்டாளாம். நான் அங்கு சென்ற மூன்ரும் நாள் அவருடைய மகளும் இறந்துவிட்டாள். அதனுல் எனக்கு, அங்கு தங்கியிருக்கப் பிடிக்கவில்லை. வந்த காரியத்தை முடித்துக்கொண்டு உடனே புறப்பட்டுவிட்டேன். ஒரு காலத்தில் நன்ருக இருந்த ஊர் சக்கர்நாயக்கபுரம். இன்று ஆங்கிலேயர்களால் நாசமாக்கப்பட்டுக் கிடந்தது. அந்த ஊர் மக்களும் ஆங்கிலேயர்களால் பெரிதும் துன்புறுத்தப்பட்டிருக்கின்றனர்.

சக்கர்நாயக்கபுரத்திலிருந்து புறப்பட்டு ஒரு ஆற்றைக் கடந்து பிரயாணம் செய்தோம். டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஒரு கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கே நாங்கள் தங்கவில்லை. பக்கத்தில் தேவதாசிகள் நிறைந்த ஒரு ஊர் இருந்தது. அந்தக் கிராமத்தில் உயர்ந்த ரகத்துணிகள் நெய்யப்பட்டன. சலவை செய்வதிலும் அந்த மக்களுக்கு நல்ல பெயர் உண்டு. அங்கு இராமர் கோயில் ஒன்றுஇருக்கிறது. ஆண்டுக்கொருமுறை பல பகுதிகளிலிருந்தும் தீர்த்த யாத்திரை செய்பவர்கள் அங்கு வருவார்கள்.

கால்மைல் அகலமுள்ள ஒரு ஆற்றைக் கடக்க அதில் இறங்கினேம். அதில் தண்ணீர் இல்லை, வெறும் மணற் பரப்புதான் இருந்தது. வழியில் பெரும் புயல் எங்களை மிகவும் வருத்திவிட்டது. பல்லக்குத் தூக்கும் கூலிகளுக்குத் துன்பம் விளைவிக்க விரும்பவில்லை. அதனுல் நானும் இறங்கி நடந்தேன். எங்கு பார்த்தாலும் பூமிக்கும் வானத்திற்கும் இடையில் மண்ணும் தூசியும் நிறைந்து எங்கள் வழியை மறைத்துவிட்டது. நாங்கள் கால்போன திசையில் நடந்துகொண்டிருந்தோம்.

அப்போதுதான் தூரத்தில் வாத்தியங்களின் ஒலியைக் கேட்டோம். ஒலிவந்த திக்கை நோக்கி நடந்தோம். ஒருமணி நேரம் புயலை எதிர்த்து நடந்த பிறகு அந்த ஊரிலுள்ள வீடுகள் நாசமாக்கப்பட்டிருந்தன. அந்த ஊரிலுள்ள பிரயாணிகள் விடுதி பெரிய கட்டிடமாக இருந்தது. அந்த ஊர் தேவதாசிகளும்,பன்னிரெண்டு பிரயாணிகளும் அங்கே தங்கியிருந்தார்கள்.

அந்தப் பெண்கள் நாட்டியம் ஆடுவார்கள். அழகான தோற்றமுள்ளவர்கள். அவர்களை ஆடச் சொன்னேன். சிறிதுநேரம் இன்பமாகப் பொழுதுபோக்க நினைத்தேன். நான் சொன்னதும் வாத்தியங்கள் இன்னிசையைப்பரப்பின. உடனே, அந்த ஊர் மக்கள் அங்கு வந்து குழுமிவிட்டனர். இரவு நீண்ட நேரம் நாட்டியம் நடைபெற்றது.

மறுநாள் காலை எழுந்தோம். நல்ல மழை பெய்திருந்தது. மரங்கள் பசுமையுடன் காட்சியளித்தன. வீசும் காற்று குளிர்ச்சியுடன் இன்பமாக இருந்தது.

வழியில் விவசாயிகள் புகையிலைத் தோட்டத்திலும் எள் வயலிலும் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். பதினேரு மணிக்கு டச்சுக்காரர்களுக்குச் சொந்தமான பல்லிக்கோல் தொழிற்சாலையை அடைந்தோம். எனக்கு அதிக வேலைகள் காத்திருந்ததால், அங்கே நான் தங்கவில்லை. இந்தக் கிராமம் நரசபூர் மாகாணத்தில் மசூலிப்பட்டிணத்திற்கு 18 மைல் தொலைவிலிருக்கிறது. கோல்கொண்டா மன்னரிடமிருந்து இக்கிராமத்தை ஐயாயிரம் பிரஞ்சு பிளாரினு (Florins)க்கு டச்சுக்காரர் 1613-ல் விலைக்கு வாங்கிவிட்டார்கள். இங்கு துணி வியாபாரம்தான் அதிகம். சாயத் தொழிலும் இங்கு உண்டு. அத்துடன் மரம், ஓடு, செங்கல் போன்ற கட்டிடச் சாமான்களும் தயாராகின்றன. எண்ணெய்ச் செக்குகளும் ஏராளம்.

அதைக் கடந்து அன்று மாலை மற்ருெரு கிராமத்தை அடைந்தோம். அங்கு ஒரு சத்திரம் இருந்தது. ஆனுல் அது ஆபாசமாக இருந்தது. காசி-யோகிகள் அங்கே தங்கியிருந்தனர். வேறு சில பிரயாணிகளும் இருந்தனர். அதனுல் நான் அங்கே தங்கியிருக்க விரும்பவில்லை. பக்கத்திலுள்ள ஒரு தென்னந்தோப்பில் பல்லக்கிலேயே தங்கிவிட்டேன்.

காசி-யோகிகள் மண்கூஜா வைத்திருப்பார்கள். கூஜாவின் வாய் குறுகலாக இருக்கும். அந்தக் கூஜாவில் கங்கைநதியின் தண்ணீரை நிறைத்து வைத்திருப்பார்கள். அந்தக் கூஜா சுலபத்தில் உடையாமலிருக்க, அதன்மீது நூல் கயிற்றினுல் பின்னி, உறையாக மாட்டியிருப்பார்கள். ஒரு மூங்கிலின் இரு முனைகளிலும் கூஜாக்களைத் தொங்கவிட்டு, மூங்கிலைத் தோள்மீது சுமந்து செல்வாகள். சுண்ணும்பையும் களிமண்ணையும் சேர்த்து கூஜாவின் வாயை அடைத்திருப்பார்கள். அதன்மீது காசி சந்நியாசி என்று முத்திரையிட்டிருப்பார்கள். ஒவ்வொரு யோகியும் கங்கைநீர் என்பதை ருசுப்பிக்கக் காசி சந்நியாசிகளிடம் ருசுப்பத்திரம் வாங்கி வைத்திருப்பான்.

கங்கை நீரைப் புனிதமென்று பலர் கருதுவதால் பணக்காரர்களிடம் இந்த யோகிகள் அதிகப் பணத்திற்கு கங்கை நீரை விற்றுவிடுவார்கள். சில யோகிகள் நீண்ட தூரங்களிலுள்ள சிவன் கோயில்களுக்கு இந்த நீரைக் கொண்டு போய்க் கொடுப்பார்கள். காசி-யோகிகள் வருகிருர்கள் என்ருல், சத்திரங்களில் தங்க, மக்கள் இடம் கொடுப்பார்கள்.

அந்த ஊரையும் விட்டுப் புறப்பட்டோம். வழியில் கோட்டை கொத்தளங்களுடன் விளங்கிய ஒரு நகரத்தைக் கடந்து ஆறு மணிக்கு கொண்டபள்ளியை அடைந்தோம். அங்கே ஒரு அழகான சத்திரம் இருக்கிறது. அதில் ஒரு சந்நியாசி உடல் வீங்கிக்கிடந்தார். அவர் சீக்கிரம் இறந்துவிடுவார் போல் தெரிந்தது. அதனுல் அங்கிருந்து புறப்பட்டு கடற்கரையோரம் உள்ள ஒரு கிராமத்திற்கு வந்தோம். அது செம்படவர்கள் நிறைந்த கிராமம். அங்கே அரிசிச்சோறும், கரவாடுமே உணவாகக் கிடைத்தன.

அந்தக் கிராமத்தையும் விட்டு, அடுத்த கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். பிரயாண விடுதிக்கு முன்பு பல்லக்கை இறக்கி வைத்தார்கள். பல்லக்கிலிருந்து இறங்கிவிடுதிக்குள் நுழைந்தேன். நூறு ஆங்கிலேய ராணுவ வீரர்கள், தங்களுடைய மனைவி மக்களுடன் மசூலிப்பட்டிணத்திலிருந்து அங்கு வந்து தங்கியிருந்தார்கள்.

அங்கு ஒரே கூச்சலும் குழப்பமும் நிறைந்திருந்தது. சிலர் பாடிக்கொண்டிருந்தார்கள். சிலர் விளக்குகளை வைத்துக்கொண்டு படித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் குடித்துவிட்டு தங்களுக்குள் சச்சரவிட்டுக்கொண்டிருந்தார்கள். தாய்மார்கள் தங்கள் பெண்களுடன் சண்டைபிடித்தார்கள். கிழவிகள் வீம்பு பேசிக்கொண்டிருந்தார்கள். சில பெண்கள் குழந்தைகளைத் தூங்கச் செய்ய தாலாட்டு பாடிக்கொண்டிருந்தார்கள்.

சிலர் நிம்மதியாக பக்கத்திலுள்ள மரத்தடிகளில் தங்கியிருந்தார்கள். நானும் ஒரு மரத்தடியில் நிம்மதியாகத் தூங்கி எழுந்தேன். காலை நான்கு மணிக்கு அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டோம். காலை எழு மணிக்கு ஒரு கிராமத்தை அடைந்து காலை உணவு சாப்பிட்டோம். கூலிகள் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது அந்தக் கிராமத்தைச் சுற்றி வரக் கிளம்பினேன்.

நான்கு பெரிய கோயில்களும், சில குளங்களும் அங்கே காணப்பட்டன. மூன்று சத்திரங்களும் அங்கே இருந்தன. ஒரு நாவிதர் ஒரு கண்ணுடித்துண்டினுல் ஒரு மனிதருக்கு தலைச்சவரம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்தேன். கண்ணுடித்துண்டினுல் சவரம் செய்யும்போது அந்த மனிதர் வலியிருப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஆனுல் தாடி மீசை சிறைக்க கண்ணுடித்துண்டை அந்த நாவிதர் உபயோகப்படுத்தவில்லை. முகத்திலுள்ள தோல் மிகவும் மிருதுவாயிருப்பதால் அதை உபயோகிக்கவில்லைபோலும்.

அந்தக் கிராமத்திலிருந்து புறப்பட்டு மசூலிப்பட்டிணத்தை நெருங்கினேம். ஏராளமான மக்கள் கால் நடையாகவும், குதிரைகளிலும், வண்டிகளிலும் சாலை வழியாகப் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்கள். கிராமங்களிலிருந்து காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை நகருக்கு எடுத்துச்சென்ருர்கள். சலவைத் தொழிலாளர்கள் கழுதைகளின்மீது மூட்டைகள் ஏற்றி நடத்திச் சென்ருர்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

வெண்பாப் போட்டி

வெண்பா 5-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

5. கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

◉ பூவனத்தில் பூவாப்பூ ! பொன்முகத்துக் கன்னிப்பூ !
தூமனத்துக் கற்பு துலங்கும்பூ ! -- நீமணந்தால்
உய்வாள் மறத்தலைவ ! உய்யாள் உரைமறுத்தால்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்
— கலிப்பகை, சேலம்.

★

பள்ளியிலே நம்செல்வன் பாராட்டும் பல்பரிசும்
அள்ளிவந்தான் நான்புகழ்ந்தால் அஞ்சுகமே -- பிள்ளையுளம்
பொய்மைச் செருக்கடையும் பூரிப்பால் நெஞ்சாரக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— நாவுக்கரசன், காரைக்குடி.

★

வான்,கா மலை,யாறு, வண்ணச் சுனை,யாழி,
தேன்,பூ, மதி,தென்றல் செங்கதிரில் -- மான்போல
ஓய்யார நாட்டியஞ்செய் தோங்கெழிலே ! என்னெஞ்சைக்
கொய்யாமல் கொய்தணைத்துக் கொள்.
— எம். எஸ். மணி, திருக்கழுக்குன்றம்.

★

இன்ப மழலைச்சொல் ஈந்து மகிழ்வூட்டி
அன்பு மலர்க்கையோ டாடிவந்து -- துன்பத்தை
எய்தாமல் இன்பூட்டும் இன்குழவிப் பொன்கனியைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்
— இல. அரவரசன், தமிழாசிரியர், மூகவை.

★

இல்லறத் தோட்டத்தில் நல்லற வித்தூன்றி
நல்லன்பு நீர்பாய்ச்ச இன்பமெனும் -- நல்லமுதே !
செய்யச் செடிவளர்ந்து செம்மழலை பூத்ததுகாண் !
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள் !
— சவ்வாது, ஆசிரியர், கயற்கண்ணிபுரம்.

★

என்வறுமை தாக்கினும் எள்ளுதல்போல் அன்புருவாய்
புன்முறுவல் பூக்கும் புதையலாம் -- பொன்னுருக்கிச்
செய்யாமற் செய்த சிசுவினைச் சிற்றிடையே
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— இரெ. தங்கையா B. A., திருமங்கலம்.

★

எள்ளுப்பூ நாசி எழிற்கண் குவளைமலர்
ஒள்ளிய முல்லை ஒளிர்பற்கள் -- மெல்லியலார்
மெய்யெலாம் பூக்காடு மென்மை தனையோர்ந்து
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— க. குணசேகரன், சென்னை-3

★

பொல்லாச் சிறுவிழிப் புன்னகை சேர்திருச்
செல்வனின் பாதச் சிறுமலர்தான் -- தாழ்குழலோய் !
செய்யுந் தளர்நடை சாய்கிலை கண்டோடிக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— ம. சுந்தர இராமானுஜம், மதுரை.

★

களம்புகுந்து வீரக் களிறெறிந்த மையால்
உளம்புகுந்த என்னு ருயிரே -- குளிர்மதியம்
வெய்யோன்போல் வாட்டி வதைக்குமுன் நீரென்னைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— இரா. ப. மனோகரன், மதுரை.

★

சேல்விழியே, நம்மின் சிறுமகவும் இக்நேரம்
வீல்என்று கத்தும் விரைந்தோடு ! -- வேலையினைச்
செய்திடலாம் பின்னே, சிரித்திடவே பாலனைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— கி. கண்ணப்பன், விழுப்புரம்.

தள்ளரிய வாய்மைத் தமிழ்மறையாம் முப்பாலும்
உள்ளுதோ றுள்ள முவந்திடுமேல் -- வள்ளுவனார்
செய்த பனுவலெனும் நீதிதனை நெஞ்சேநீ
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— க. வீ. வரதன், சென்னை.

★

வாய்கண் செவிமூக்கு வண்மெய் யெனவைந்தாம்
ஆய் கொள் புலன்கள் அனைத்திற்கும் -- காய்நெருப்பின்
செய்யா மெனத்திகழும் நேரிழையாள் அன்புளத்தை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— இரா. இராஜம்மாள், இராமநாதபுரம்.

★

"ஏற்காதே தாழ்குலத்தாள், தாலியற்றாள்" என்றுபவர்
சாற்றிடினும் சிந்தித்துச் சீர்தூக்கிப் -- போற்றியுளம்
பொய்யாமல் இல்லப் பொறுப்பேற்கும் பெண்ணொன்றால்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— இரா. சிவஞானவள்ளல், வேலூர்.

★

ஆழாக்(கு) அரிசிக்(கு) அலைகின்ற நானுனக்குத்
தாழம்பூ வாங்கத் தகுமோடீ ! -- தாழ்குழலே !
பொய்கைக் கரையிலே பூக்கும் பிணப்பூவைக்
கொய்யாமல் கொய்தணைத்துக் கொள்.
— அ. வேதாசலம், அறந்தாங்கி.

★

எப்போதும் சேட்டை இயல்பாகச் செய்கின்ற
அப்பாவி நம்பிள்ளை அன்பரசி ! -- தப்பிதங்கள்
செய்தாலும் அன்னவன்மேற் சீறிவிழா தேயவனைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— சித. நாச்சியப்பன், கல்லுக்கட்டி

★

குறுகுறு செய்மைந்தன் கொஞ்சுமுகம் நோக்கி
"மறுவிலா என்கணவன் மாண்பின் -- மறுபதிப்பே
மெய்யாய்" எனும்தோழி ! மைந்தன் கனியிதழைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— வேலாயுதம், ஆசிரியர், புளியங்குடி

★

முக்கனிக்கும் மேல்இனிக்கும் மூவேந்தர் காத்தகனி
அக்கனியாம் நந்தாய் அருந்தமிழின் -- மிக்குசுவை
நய்யாமற் தென்றலிதழ் நல்கிடும் நற்கனியைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— அ. மஞ்சினி, திண்டிவனம்.

★

பிழைசெய்யா மாந்தர் பெருநிலத்தில் இல்லை
மழைநிகர்த்த மாண்புடைய தோழா ! -- உழையிருப்போர்
செய்யாமற் செய்யும் சிறுமையினைக் கண்டக்கால்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— வித்துவான். வெங்கடேசன், நெல்லிக்குப்பம்.

★

பண்ணில் சுவைமிக்காள் பாராளும் பாவையாள்
வண்ணம் மிகவுடைய வாலைப்பெண் -- மண்ணுலகில்
மெய்யே புகன்றிடும் மேலாள் தமிழணங்கை
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
—கா. சண்முகவேலு, திருச்சுழி.

★

வள்ளுவமும் காலடியும் வண்டமிழின் நூல்பலவும்
தெள்ளியசீர் நற்றுறையில் செப்புகின்ற -- நல்லறத்தை
செய்திடாமல் தாழ்உலகே ! இன்பமுற எந்தமிழைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்
— மு. சீனிவாசன், வத்தலக்குண்டு.

★

தென்றல் தவழ்ந்தசையும் தேமலர்நம் சோலையில்
மின்னுவேற் கண்பாய்ச்சி மெல்ல நகும் -- என்தமிழே !
மெய்குழைந்தேன் இன்பம் மிகுமொழியால் என்னுயிரைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— தா. சுப்பிரமணியம், தமிழாசிரியர், திருக்கழுக்குன்றம்.

★

மங்காத பொற்பேடே ! மாணிக்கச் செவ்வொளியே !
தங்காமல் நம்முள்ளம் தான்சேரத் — திங்களைப்போற்
செய்யாமற் செய்தநற் செம்பொற் சிலையதனைக்
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.
— மா. செயராமன், கடலூர்.

◉ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

பன்மலர்ச் செண்டு

அதுவும் சுயநலந்தான்

பிரசித்திபெற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன், சாதாரண வக்கீல்தொழில் புரிந்துகொண்டிருந்த காலம். அவரும், அவருடைய தொழில் கூட்டாளியான ஹெண்டனும் சகதி ரஸ்தாவிலே, கொட்டும் மழையிலே, வேதாந்த விஷயமான ஒரு தர்க்கம் செய்துகொண்டு, ஒரு வண்டியில் சென்றார்கள்.

சுயநலமில்லாமல் மனிதன் எந்தக் காரியத்தையாவது செய்வதுண்டா? இது ஒரு கேள்வி. "உண்டு" என்றார் ஹெண்டன். "இல்லவே இல்லை" என்றார் லிங்கன். இந்தச்சமயத்தில், ரயில்வே வேலியில் மாட்டிக்கொண்ட ஒரு பன்றி, உயிருக்கு மன்றாடிக் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தது.

லிங்கன் 'சட்'டென்று குதித்தார். ஓடிப்போய்ப் பன்றியை விடுவித்தார். சொட்டச் சொட்ட மழையிலே நனைந்தவராய்த் திரும்பி வந்து வண்டியிலே ஏறிக்கொண்டார்.

'இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்? உங்கள் வாதமெல்லாம் பொய்யாகிவிட்டது. உங்கள் செயல் என் கட்சியை நிரூபித்துவிட்டது. நீங்கள் செய்தது சுயநலமற்ற காரியமல்லவா?'' என்று கேட்டார் ஹெண்டன்.

"இல்லை. நான் செய்தது முற்றிலும் சுயநலமான காரியமே. இந்தப் பன்றியை இப்போது விடுவித்திராவிட்டால், இன்று ராத்திரியே எனக்குத் துளிக்கூடத் தூக்கம் வராது: இதன் ஓலம் என் கனவிலே எதிரொலி செய்யும். நான் விடுவிக்காவிட்டாலும், அது தப்பித்துச் சென்றிருக்கலாம்; என்றாலும், அது எனக்குத் தெரியாதாகையால், என் அவஸ்தை மட்டிலும் தீராது. ஆகையால், என் கட்சிதான் வெற்றிபெற்றது" என்று பதிலளித்தார் லிங்கன்.

★

கல்லை அடகு வைத்தார்

பம்பாய்க் காங்கிரசுக்கு நண்பர்கள் சிலருடன் வ. உ. சி. சென்றிருந்தார். போன இடத்தில் கையிலிருந்த பணமெல்லாம் செலவாகி விட்டது. அவர் கடன் கேட்டால் யாரும் கொடுப்பார்கள். ஆனால், கப்பல் முதலாளி கடன் கேட்டார் என்ற அபக்கியாதி வரக்கூடாதென்று அவர் நினைத்தார். தம்முடைய நிலைமையை வ. உ. சி. திலகரிடம் தெரிவித்திருந்தால் போதும்; எவ்வளவு பணம் வேண்டுமென்றாலும் அவர் கொடுத்திருப்பார். வ. உ. சிக்கு அதுவும் பிடிக்கவில்லை. நண்பர்களுடன் கலந்து ஆலோசனை செய்யாமலே அவர் ஒரு முடிவுக்கு வந்தார். ஒரு பணப்பை நிறையச் சிறு கற்களை நிரப்பிக் கட்டினார். அதற்குச் சீல் வைத்தார். ஒரு பெரிய மார்வாடியிடம் சென்றார். "இந்தப் பையில் தங்கம் இருக்கிறது. இதை ஈடாக வைத்துக் கொண்டு பணம் கொடுக்கவேண்டும். வந்த இடத்தில் கையிலிருந்த பணம் செலவாகிவிட்டது," என்று தைரியமாகக் கூறினார். அந்த மார்வாடியும் பொன்பையை வாங்கி வைத்துக்கொண்டு, வ. உ. சி. கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டார்.

அவர், சென்னைக்கு வந்ததும் மார்வாடிக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை மணியார்டர் செய்தார். தங்கக்கட்டிகள் நிறைந்த பையை, தபாலில், மார்வாடியும் திருப்பி அனுப்பினார். பம்பாய்க்குச் சென்ற நண்பர்களைச் சுற்றிலும் வைத்துக்கொண்டு, அந்தப் பையின் சீலை உடைத்து, "நான் தங்கக்கட்டிகள் நிறைந்த பையை மார்வாடியிடம் ஈடு வைத்துக் கடன் வாங்கினேன் அல்லவா? இதோ பாருங்கள் அந்தத் தங்கம்" என்று வ. உ. சி. கீழே கொட்டினார். பல சிறிய கற்கள் வந்து விழுந்தன. இதைப் பார்த்த நண்பர்கள் பிரமித்துப் போனார்கள்.

★

கவிஞனின் பலம்

ஸ்பெயின் தேசத்தில் ஸெர்வான்டெஸ் என்ற ஒரு கவிஞன் இருந்தான். இவனது வாழ்நாளில் பிற்பாகம் வறுமையின் உருவமாயமைந்துவிட்டது. போதாக்குறைக்குச் சிறை வாசமும் ஏற்பட்டது: இந்தச் சிறைவாசத்தின் போதுதான், உலகத்தின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட 'டான் க்விக்ஸோட்' என்ற பிரபல நூலை எழுதினான். இவனுடைய கடைசி நாட்களில் இவனுக்கு எழுதுவதற்குக் காகிதம்கூடக் கிடைக்கவில்லை அவ்வளவு தரித்திரம். ஆனால், தன் எண்ணங்களை இவனால் அடக்கிவைக்க முடியவில்லை. எனவே, அவ்வப்போது அகப்பட்ட தோல் துண்டுகளின் மீதெல்லாம் கிறுக்கி வைத்தான், இவனுடைய பரிதாப நிலையைப் பார்த்த ஒரு சிலர், இவனுக்கு உதவி செய்யுமாறு ஒரு பிரபுவைக் கேட்டார்கள். அப்பொழுது அந்தப் பிரபு கூறினார். "ஓ! ஸெர்வான்டெஸின் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலே இருக்கவேண்டும். ஏனென்றால், அவனுடைய வறுமைதான், இலக்கிய உலகத்தைச் செழுமையாக்கிக் கொண்டு வருகிறது." கவிஞர்கள் சிறையிலே வசித்தாலும், அவர்கள் அதனைச் சிறையாகக் கருதுவதில்லை. அவர்களுடைய சுதந்தர உணர்ச்சியானது, சிறையின் இருட்டை ஒளிமயமாக்கி விடுகிறது.

◉

பேராசிரியர் சுந்தரம்

நூற்றாண்டு விழா !

17—4—55 ஞாயிறன்று

பேராசிரியர் இலக்குவனார்:
எம். ஏ., எம். ஓ. எல்.
அவர்கள் பேசுவரர்கள்.

கு. ஆனந்தம்
திருவள்ளுவர் கழகம்
ஆம்பூர்.

பொய்யா மொழிகள்

பழமைப் பித்திலிருந்து வகுப்புவாதம் கிளம்புகிறது. பழங்கால நோக்கில் விஷயங்களை அணுகுவதாலும் பழங்கால சுலோகங்களை கோஷிப்பதாலுமே வகுப்புவாதம் தோன்றுகிறது!

—பண்டிதநேரு

★

சிறு குழந்தைக்கு யாராவது ஒருவர் விளையாட வேண்டும். காதல் கொண்ட இளம் உள்ளமும் குழந்தையைப்போலவே விளையாட்டுச் சிநேகிதரைத் தேடிக்கொண்டிருக்கும்.

—வி. ச. காண்டேகர்

★

உண்மை என்பது நன்மையாகவும் இருக்கமுடியாது; தீமையாகவும் இருக்கமுடியாது. அதுகேவலம் உண்மையே யொழிய வேறல்ல.

—தாகூர்

★

உண்மையான ஞானி யார்? ஐயோ, காலம் பறந்துகொண்டிருக்கிறதே என்று உணர்கிறவன்தான்.

—தாந்தே

★

சின்னஞ்சிறு செலவுகளைப் பற்றியும் கவனமாய் இருங்கள். அடித்தலத்திலுள்ள சிறு ஓட்டை ஒரு பெரிய கப்பலையே மூழ்கடித்து விடலாம்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்

காதலில் தேனும் இருக்கிறது கடுக்காயும் இருக்கிறது.

—பிளேட்டோ

★

அழகு என்றும் அஸ்தமிப்பதில்லை. ஆனால், அது மற்றொரு அழகிலே ஐக்யமாகிவிடுகிறது.

—தாமஸ் பெய்லி

★

காதலிக்கும்போது மனிதன் கனவு காண்கிறான். கல்யாணம் செய்து கொள்ளும்போது கண் விழித்துக்கொள்கிறான்.

—அலெக்சாண்டர் போப்

★

கூலி கொடுப்பவனைக் கீழே தள்ளுவதால் கூலி வாங்குகிறவனை உயர்த்திவிட முடியாது.

—லிங்கன்

★

முட்டாள்கள் எதையும் அப்படியே நம்புகிறார்கள். புத்திசாலிகள் எதிலும் சந்தேகம் கொள்ளுகிறார்கள். இதுதான் உலகத்தைக் கஷ்டப் படுத்துகிறது.

—ரஸ்ஸல்

★

அரைப்பட்டினி, அரைகுறை சுபிட்சம், பாதி அடிமை, பாதி சுதந்தரம் என்பவைகளை எல்லாம் மனித வர்க்கம் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது.

—ராதாகிருஷ்ணன்

★

தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவரும் அறிஞர்களின் கருவூலங்களே புத்தகங்கள்.

—அடிஸன்



ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி

3

"யார்பா லுரைப்பன்? யார்போ யுரைப்பர்?"

"செந்தமிழ்ப் பண்பாடுஞ் செவ்வாய் பசுங்கிள்ளாய்!
வந்தென் னவனுண்டு வாராதலர் செய்யும்
சந்தங்கொள் வேங்கைத் தமிழ்க்குன்ற வாணனுக்கின்
றெந்தன் நிலைமை யினிதெடுத்துச் சொல்லாயோ!

—இராவண காவியம்

அன்னையிடம் அவசியம் அனுமதி பெற்றுவிடத் தீர்மானித்தாள் மங்கை. இனியும் தன் காதலனைப் பிரிந்திருக்க அவள் விரும்பவில்லை. கமலினியின் அவலச்சாவு அவளைப் பயமுறுத்திக் கொண்டேயிருந்தது. பாதுகாப்பு இல்லாமல் வாழ்ந்ததால் கமலினியின் கற்பு பறிபோனதை எண்ணினாள். அதனால் தானே அவளுடைய வாழ்வும் முடிந்தது!

அன்னையிடம் எல்லாச் செய்திகளையும் விபரமாக எடுத்துரைத்தாள். தன் காதலன் கோமளத்தீவில் சிறையிருப்பதையும் சொன்னாள். அன்னையின் அனுமதி கிடைத்தால் அவனை அழைத்து வருவதாகச் சொன்னாள். ஆலங்காட்டில் அன்னையின் படைக்கு அவன்செய்த உதவிகளையும், சேவையையும் எடுத்துரைத்தாள். "அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்" என்று கேட்டாள் அன்னை.

"சோழ வள நாட்டைச் சேர்ந்தவன். இடைதுறை நாட்டின் மீது வஞ்சம் கொண்டவன். அதனால் தான் கமலினி கூட அவனால் கற்பிழக்க நேர்ந்தது," என்று எடுத்துரைத்தாள் மங்கை.

மங்கையின் உறுதியான காதலை எண்ணிப் பார்த்தாள் அன்னை. அவளுடைய சேவையையும் நினைத்தாள். அவளுடைய காதலனை அழைத்து வரும்படி மங்கைக்கு அனுமதியும் கொடுத்தாள்.

அன்னையின் பெருந்தன்மை மங்கைக்கு ஆச்சரியத்தை யளித்தது. இவ்வளவு விரைவில் அன்னை அனுமதிப்பாளென்று, மங்கை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அவள் உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது அன்னையை வணங்கி எழுந்தாள். அவளுடைய கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடித்தன. பக்கத்தில் நின்ற நந்தினியை கட்டித் தழுவிக் கொண்டாள். அதே சமயம் நந்தினியின் உள்ளத்திலே மோதி எழும் துன்பத்தை யார் அறிவர்?

கோமளத் தீவுக்குப் புறப்பட்டாள் மங்கை. சாந்திமத் தீவிலிருந்து ஒரு மைல் தூரம் தான். கோமளத் தீவு. ஆனால் அது ஓராயிரம் ...மல்களிருப்பதாக உணர்ந்தாள். ...தலனைத் தேடி அவள் உள்ளம் ...து சென்றது. அவளுடைய ...ள் நனவாகப் போகின்றன. ...ித பயமுமின்றி அவனுடன் கூடி இல்லற வாழ்வு நடத்தலாம். அவளுடைய உள்ளம் குதூகலத்தால் கூத்தாடியது.

கோமளத்தீவில் காதலனைச் சந்தித்தாள் மங்கை. பூங்கொடிகளால் அவனைப்பிணைத்தாள். அவளுடைய உள்ளத்திலே, அவனைச் சிறை வைத்து விட்டதாகக் கூறினாள். குதித்தாள்; கூத்தாடினாள். மங்கையின் காதலனுக்கு அவளுடைய மகிழ்ச்சியின் காரணம் புரியவில்லை. நீண்ட நேரம் திண்டாடினான். அவள் சொன்னபடியெல்லாம் நடந்து கொண்டான். கடைசியில் மங்கை எல்லா விபரங்களையும் எடுத்துச் சொன்னாள். அவனுக்கு அப்போதுதான் உண்மை தெரிந்தது. காதலியைக் கட்டியணைத்துக் கொண்டான்.

சாந்திமத் தீவில் உற்சாகம் பொங்கி வழிந்தது. மங்கைக்குத் திருமணம். மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்தனர். அன்னை மணமக்களை ஆசிர்வதித்தாள். மங்கையைப் போல அவளுடைய கணவனும் சில உறுதி மொழிகளை எடுத்துக் கொண்டான்.

"தாயின் மீது ஆணை!
"தமிழின் மீது ஆணை!"
"தாயகத்திற்கு நலமே புரிவேன்"
"அவ்வெண்ணம் கொண்டே இங்கு வந்தேன்!"

மங்கையின் காதலன் இதைச் சொல்லி முடித்ததும் முரசுகள் முழங்கின. சங்கம் ஒலித்தது. மங்கையும் அவளுடைய காதலனும் எல்லோரையும் வணங்கிச் சென்றனர். மாலை சூடி மகிழ்ந்த பின்னர், மனம் நிறைந்த வாழ்வுபெற மணவாளனுடன் சென்று விட்டாள் மங்கை.

மங்கையின் திருமணம் நந்தினிக்குத் தளநாயகனை நினைவு படுத்திக் கொண்டிருந்தது. ஊர் முழுதும் உற்சாகத்தில் ஆழ்ந்திருந்த போது நந்தினி மட்டும் பிரிவாற்றாமையால் வெந்து நைந்துகொண்டிருந்தாள். அவளுக்கு இரண்டு ஆசைகள் உண்டு. ஒன்று தன்னைப் பெற்றெடுத்த அன்னையைக் காணவேண்டும். மற்றொன்று தளநாயகனுக்கு மாலையிடவேண்டும். முதல் ஆசை நிறைவேறி விட்டது. அந்த ஆசை நிறைவேறிய மகிழ்ச்சியில், சில நாட்கள் தளநாயகனை மறந்திருந்தாள். இன்று மங்கையின் திருமணமும், அவர்களுடைய இன்ப வாழ்க்கையும் அவளுக்குத் தளநாயகனை ஞாபகப் படுத்திக் கொண்டேயிருந்தன.

ஒவ்வொரு நாளும் நந்தினியைக் காண மங்கை வருவாள். இருவரும் நீண்டநேரம் பேசுவார்கள். அவர்கள் பேச்சில், மங்கையின் காதலனைப் பற்றித்தான் அதிகம் அடிபடும். அவன் பேசிய சொற்கள்; மங்கையிடம் அவன் நடந்து கொண்ட முறை இதையெல்லாம் கிண்டிக் கிளறிக் கேட்பாள். சில சமயங்களில் மங்கை வெட்கித் தலை குனிவாள், சில சமயங்களில் பதில் சொல்ல மறுப்பாள். மங்கை சென்றதும் நந்தினிக்குத் தனிமை வேதனையளிக்கும். மங்கை சொல்லிச் சென்ற நிகழ்ச்சிகளையும், தளநாயகன் தன்னிடம் கூறிய உறுதி மொழிகளையும் நினைத்து உருகுவாள். இரவு நேரத்தில் தூக்கம் வராது துயருறுவாள். எழுந்து வெளியே சென்றால் வானத்தின் நிலவு அவளைப்பார்த்து ஏளனம் செய்யும். வீசும் தென்றல் வெம்மையாகத் தோன்றும். பறவையினங்கள் சோடி சோடியாக மரக்கிளைகளிலே உட்கார்ந்து, மூக்கினால் கொத்தி விளையாடும். இவையெல்லாம், நந்தினிக்குத் துன்பத்தையே கொடுக்கும்.

"என் வாழ்வு மலரும் நாள் என்று? தளநாயகனுடன் கூடிக் களிக்கும் நாள் எப்பொழுது? என்னைக் காணாமல் தளநாயகன் எவ்வளவு வேதனைப் படுகிறாரோ? போருக்குச் சென்றவர் நலமாகத் திரும்பியிருப்பாரா? எதிரிகளின் நாடுகளில் எத்தனையோ அழகிகளைப் பார்க்க நேர்ந்திருக்கும். அப்போதெல்லாம் என்னை நினைத்திருப்பாரே! அல்லது அவருடைய மனம் தான் மாறியிருக்குமா? ஐயோ! அவரிடமிருந்து ஒரு செய்தி கூடக் கிடைக்கவில்லையே? அவரை எப்படிக் குறை கூற முடியும்? நான் இருக்குமிடம் அவருக்கு எப்படித் தெரியும்! நான் தான் செய்தி அனுப்பவேண்டும். எப்படி அனுப்புவது? யாரிடம் உரைப்பேன்? யார் போய் உரைப்பார்? வேதனையால் வெந்துருகும் என் உள்ளத்திற்குச் சாந்தியில்லையா?"

இவ்வாறு பல வாறாக எண்ணினாள் நந்தினி. மெத்தை முள்போல் தைத்தது. புரண்டு புரண்டு படுத்தாள். நினைவு மறந்து தூங்கி விட்டாள்.

★

4

"நினைத்தவை யனைத்தும் நிறைவே றினவே!"

பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு.

—குறள்.

இடைதுறையானும் அரிசங்கமனும் அரண்மனையிலிருந்துபுறப்பட்டனர். இடைதுறையான் முகத்தில் கவலை தோய்ந்திருந்தது. அரிசங்கமன் அவனுக்கு ஆறுதல் கூறிக் கொண்டு வந்தான்.

"இலங்கைப்படையெடுப்பு நமக்கு நல்ல சந்தர்ப்பத்தையே அளித்திருக்கிறது. இராசேந்திரனுக்கு உறுதுணையானவன் தளநாயகன். அவனும், அவனுடன் பெரும் படையும் கடல் கடந்து செல்கிறது. இளவரசனும் போய்விட்டான். இனி மன்னன் ஒருவன்தான் இங்கிருக்கிறான். அவனை எளிதில் கவிழ்த்து விடலாம்," என்றான் அரிசங்கமன்.

"இராசேந்திரனும் போருக்குப் புறப்பட்டிருந்தால் எவ்வளவோ நலமாயிருக்கும்," என்றான் இடைதுறையான். இருவரும் பேசிக் கொண்டே வீட்டை அடைந்தனர். தோட்டத்தில் மரகதம் பூவெடுத்துக் கொண்டிருந்தாள். புஞ்சராயர் மட்டும் படுக்கையில் படுத்திருந்தார். அவர், சபை கலைந்ததும் உடனே வீட்டிற்கு வந்து விட்டார். "இராசேந்திரன் இலங்கை செல்லாதது தவறு" என்று அவருடன் சிறிது நேரம் விவாதித்தனர்.

இதற்கிடையில் மரகதம் அங்கே வந்து விட்டாள். அவளைக் கண்டதும் அரிசங்கமனுக்கு ஆத்திரம் அதிகரித்தது. அவளை அழைத்துக் கொண்டு ஒரு தனியறைக்குச் சென்றான். இடைதுறையானும் அவர்களைப் பின் பற்றிச் சென்றான்.

அங்கே மரகதத்தை இருவரும் கண்டித்துக் கேட்டார்கள். ஏதாவது ரகசியத்தைத் தளநாயகனிடம் வெளியிட்டிருப்பாளோ என்ற பயம் அவர்களுக்கு. காலையில் அவசரமாக ஆலோசனை சபைக்குச் சென்று விட்டதால், மரகதத்தை சரியாக விசாரணை செய்ய முடியவில்லை.

மரகதம் நடந்ததையே கூறினாள். சந்தேகமிருந்தால் சித்தினியைக் கேட்கும்படி கூறினாள். இடைதுறையான் இதை நம்பவில்லை ஏதோ அவள் பாசாங்கு செய்வதாகவே நினைத்தான். சதித் திட்டம் நிறைவேறும் வரை, மரகதத்தை வெளியில் எங்கும் போக விடாமல் தடைசெய்யும்படி கூறினான். அரிசங்கமனும் இதை ஆமோதித்தான்.

மரகதம் இதுவரை பொறுமையாகத் தானிருந்தாள். அரசியல் விவகாரம் அவளுக்குப் புரியாது. அதனால் அவளும் அதில் தலையிடுவதில்லை. வந்தவரை உபசரிப்பதில் மட்டும் அவள் கவனம் செலுத்தி வந்தாள். நந்தினி திடீரென ஒரு நாள் காணாமற் போய்விட்ட பிறகு

தான் அவள் சிறிது சிந்திக்க ஆரம்பித்தாள். நந்தினி காணாமற் போய் நீண்ட நாட்களாகி விட்டன. அவளைப்பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. அது அவளுடைய மனதை வருத்திக் கொண்டேயிருந்தது. அதனால், வீட்டிற்கு வருபவர்கள் அரிசங்கமனுடன் ரகசியம் பேசினால் மறைந்து நின்று கேட்பாள். நந்தினியைப்பற்றி ஏதாவது பேசுகிறார்களா என்பதை அறியஅவள்மனம் நாடியது. ஆனால், நந்தினியைப்பற்றி அவள் ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. அதற்குப் பதில் பயங்கர சம்பவங்கள் பல அவளுடைய காதிலே விழுந்தன.

இடைதுறையான் அங்கு வந்ததிலிருந்து அவளுடைய சந்தேகம் அதிகரித்தது. வரும்பொழுது சாதாரண உடையில் தான் வீட்டிற்கு வந்தான். மரகதம்தான் முதலில் அவனை உபசரித்தாள். ஆனால் அவன் ஏன் சந்நியாசிக் கோலத்தில் தங்கியிருக்கிறான்? இதுதான் அவளுக்கு ஆச்சரியத்தை யளித்தது. அன்று முதல் அவர்கள் பேசுவதை எல்லாம் ஒட்டுக் கேட்டாள். சோழ ஆட்சியைக் கவிழ்க்க அவர்கள் சதிசெய்வதெல்லாம்அவளுக்குத் தெரிந்துவிட்டது. ஏதோ ஒரு விபரீதம் நடக்கப் போவதை அறிந்தாள். ஆனால் இதை வெளியில் சொல்ல மிகவும் பயந்தாள்.

சித்தினி அடிக்கடி அங்கு வருவாள். அவளிடம்கூட மரகதம் எதுவும் சொன்னதில்லை. இன்று இடைதுறையான், அவளை வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாதென்று தடை விதித்தது தான் அவளுக்கு எரிச்சலைத் தந்தது. ஆனால் தந்தைக்குப் பயந்து சம்மதித்தாள்.

சோழ நாட்டுப் படைகள் ஈழத்திற்குப் படையெடுத்துச் சென்று விட்டன. இராசேந்திரன் புதிய தலைநகர் ஒன்று தன் பெயரால் ஏற்படுத்த எண்ணினான். தஞ்சைக்கு வடக்கே அந்நகரை நிர்மாணிக்கும்படி திட்டம் வகுத்துக் கொடுத்திருந்தான். அதுவே பின்னர் கங்கை கொண்ட சோழபுரமாயிற்று. அந்நகரை நிர்மாணிக்க பல்லாயிரக் கணக்கான மக்கள் வேலை செய்தனர். அந்நகரை இராசேந்திரன் அடிக்கடி பார்வையிட்டுத் திரும்புவான். அரிசங்கமனின் சதித் திட்டம் சுலபமாக நிறைவேற இதுவும் ஒரு வாய்ப்பாக இருந்தது.

இடைதுறை நாட்டிலும், சளுக்க நாட்டு எல்லையிலும் சோழனுடைய படைகள் பாதுகாவலுக்கு நிறுத்தப் பட்டிருந்தன. பாண்டிய நாட்டிலும் ஒரு பகுதிப்படை இருந்தது. பெரும் பகுதிப்படை இலங்கைக்குச் சென்று விட்டது. நகரக்காவலுக்குத் தேவையுள்ளவர் போக, எஞ்சிய படைகளைப் புதிய நகரத்திற்கு வேலை செய்ய அனுப்பி விட்டான் இராசேந்திரன்.

இச்சமயத்தில்தான் அரிசங்கமன் தன்னுடைய சூழ்ச்சி வலையைப் பின்னினான். நகரக்காவல்தலைவன், அரிசங்கமனுக்கு நண்பன். அவனுக்குச் சோழநாட்டின் படைத் தலைமையைத்தருவதாகவாக்குறுதி யளித்தான். கனவில் கூட நினைக்க முடியாத அப்பதவி தனக்குக் கிடைக்கப் போவதை நினைத்து நகரக் காவலன் அவனுடன்ஒத்துழைப்பதாக வாக்குறுதி யளித்தான்.

ஒரு நாள் மாலை இராசேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தஞ்சைக்குத் திரும்பினான். அவனுக்குப் பாதுகாப்பாக நகரக் காவல் தலைவனும் அவனுடைய படைகளும் வந்து கொண்டிருந்தன. திடீரென்று வீரர்கள் நின்றனர். மன்னனைச் சூழ்ந்தனர். இராசேந்திரன் ஒரு நொடியில் கைது செய்யப்பட்டான்!

சந்நியாசிக் கோலத்தில் அங்கு தோன்றினான் இடைதுறையான்.

கல கல வென்று நகைத்தான். "இடைதுறை நாட்டை வெற்றி கொண்டதால் இறுமாந்திருந்தாயே மன்னா! இன்று உன்கதி என்ன? நீ என்கைதி. இடைதுறை நாடுமட்டுமல்ல ; சோழ சிம்மாசனம் என்னுடையதாகி விட்டது! இன்னும் என்ன நடக்கிறதென்று பார்!" என்றான் இடைதுறையான். மீண்டும் நகைத்தான். அரிசங்கமனும் அவனுடன் சேர்ந்து நகைத்தான்.

இராசேந்திரனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது. மன்னாதி மன்னர்களை நேர் நின்று வெற்றி கொண்ட வீரன் அவன். சூழ்ச்சி அவனுக்குப் புதிது. ஆயினும் நாட்டிலே நடந்த ரகசிய சூழ்ச்சியை, அவன் அறிய முடியாமல் போய்விட்டது. அதற்காகவே அவன் வருந்தினான்.

இடைதுறை மன்னன் சோழ ஆட்சியைக்கைப்பற்றிக்கொண்டான். இராசேந்திரன் சிறைவைக்கப் பட்டான். அவனுடன் அரச குடும்பமே சிறைவைக்கப்பட்டது. சந்தேகப் பேர்வழிகள் பலர் கைது செய்யப் பட்டனர். நகரக்காவல் தலைவன் சேனைத் தலைவனாக நியமனம் செய்யப்பட்டான். "நாட்டிலோ நகரிலோ இடைதுறையானை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தால், முச்சந்தியிலே அவர்கள் தூக்கிலிடப்படுவார்கள்" என்று அறிவித்தான் அவன். சோழப் பெருங்குடி மக்களே இதைக் கேட்டுத் திகைத்தனர். திடீரென்று நடந்த இச்சம்பவத்தால் எல்லோரும்அதிர்ச்சியுற்றனர்.

நாட்டின் எல்லைகளிலும், நகரத்தின் எல்லைகளிலும் காவற்படைகள் நிறுத்தப்பட்டன. நகருக்குள்ளும், நாட்டிற்குள்ளும் புகுவோரையும், போவோரையும் பரிசோதனை செய்து அனுமதிக்கும்படி கட்டளை பிறப்பித்தான் இடைதுறையான்.

அன்று இரவு, அரிசங்கமனுக்கு அரண்மனையிலே அதிக வேலை இருந்தது. அதனால் அவன் வீட்டிற்குத் திரும்பவில்லை. ஆனால், இடைதுறையான் சோழனைச் சிறை செய்ததையும், நாட்டைக் கைப்பற்றியதையும் அறிந்தாள் மரகதம். ஒருபுறம் ஆச்சரியமும் மறுபுறம் பயமும் ஏற்பட்டது. தனக்கு இனி அரண்மனை வாழ்வு கிடைக்கப் போவதில் அவளுக்கு மகிழ்ச்சி தான். இருந்தாலும் இதன் விளைவு என்ன ஆகுமோ தெரியாது. அதனால் மிகவும் பயந்தாள்.

அன்று இரவு ஒரு உருவம் மறைந்து, மறைந்து, அரிசங்கமன் வீட்டு வாசலில் வந்து நின்றது. எட்டிப் பார்த்தது. பிறகு கதவைத் தட்டியது. மரகதம் யாரென்று கேட்டாள். பதிலில்லை. மீண்டும் கதவு தட்டப்படுவதை அறிந்து, கதவைத்திறந்தாள். "மரகதம்! ஒரு முக்கியமான செய்தி!" என்றது அந்தக் குரல். கேட்டுப் பழகிய பெண்குரலாகத் தோன்றியது மரகதத்திற்கு!

"நீ யார்? சித்தினியா?"

"ஆமாம்!"

"ஏன் இப்படிப் பயந்து, தலையில் முக்காடிட்டு வந்திருக்கிறாய்?"

"என்ன செய்வது? நாட்டிலே ஒரே குழப்பமாம். மன்னர் கைது செய்யப்பட்டாராம்! சரி! உன் அப்பா எங்கே?"

"இன்னும் அரண்மனையிலிருந்து வரவில்லை!"

"அப்படியானால் அவரையும் கைது செய்திருப்பார்களோ?"

"அத்தனை பேரையும் கைது செய்தவர் அப்பாதானே!"

"சரி! வெளியில் நின்று பேசினால் ஆபத்து. வா, வீட்டிற்குள்!"

இருவரும் வீட்டிற்குள் சென்றனர். சித்தினிக்கு அரிசங்கமனுடைய சூழ்ச்சி அனைத்தும் தெரியும். மரகதம், முதல் நாள் தான் அவற்றையெல்லாம் சித்தினிக்குச் சொல்லியிருந்தாள். இன்றே இவ்வளவு தூரம் நடைபெறுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை. சித்தினி தன்னைப் பாராட்டிச் செல்லவே வந்திருக்கிறாள் என்று மரகதம் நினைத்தாள். ஆனால் சித்தினி அதற்கு மாறான செய்தி ஒன்று சொன்னாள்.

"உன் தோழி நந்தினி எங்கே?"

"திடீரென்று, இப்போது இது என்ன கேள்வி?"

"அதைச் சொல்லத்தானே வந்தேன்!"

"அப்படியானால் நந்தினி வந்திருக்கிறாளா?"

"ஆம் என்றே வைத்துக்கொள். என்னுடன் வந்தால் காட்டுகிறேன்."

"எங்கே?"

"எங்கள் வீட்டிற்கு!"

"அப்பா வந்துவிடுவாரே!"

"அவர் எப்படி வர முடியும்? அரண்மனையில்தான் அதிக வேலையிருக்குமே!"

"சரி. வா, போகலாம்!"

இருவரும் தலையில் முக்காடிட்டுக் கொண்டு இருளினூடே சென்று மறைந்தனர்.

மறுநாட் காலை. சோழன் தலைநகரில் உற்சாகமே காணப்படவில்லை. படைவீரர்களைத் தவிர அதிகமான மக்கள் வீதிகளில் நடமாடவில்லை. எல்லோருடைய முகத்திலும் பயமும் பீதியும் குடிகொண்டிருந்தன.

இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டி ஒன்றில் அரிசங்கமன் வந்தான். வீதியில் செல்வோரை அலட்சியமாகப் பார்த்துக்கொண்டே சென்றான். அவன் சென்றதும், அந்தக் திக்கையே வெறித்துப் பார்த்தனர் மக்கள். இடைதுறையானுக்கு அரிசங்கமன் துணை செய்கிறான் என்ற செய்தி நகரெங்கும் பரவிவிட்டது. அவன் வண்டியில் சென்றதைப் பார்த்ததும் "அற்பனுக்கு வாழ்வு வந்தால்..." என்று பேசிக்கொண்டனர்.

அரிசங்கமன் சென்ற வண்டி வீட்டுவாசலில் நின்றது. வண்டியிலிருந்து இறங்கி வீட்டிற்குள் சென்றான். கதவுகள் திறந்து கிடந்தன. மரகதம் அங்கே காணப்படவில்லை. புஞ்சராயர் படுக்கையில் படுத்தபடி இருமிக் கொண்டிருந்தார். 'மரகதம்! மரகதம்!' என்று கூப்பிட்டான் அரிசங்கமன். பதிலே இல்லை. புஞ்சராயரின் அருகில் சென்றான். "மரகதம் எங்கே?" என்று கேட்டான்.

"நேற்று இரவு எங்கேயோ சொல்லாமல் போய்விட்டாள். இன்னும் வரவில்லை!" என்றார் புஞ்சராயர். அரிசங்கமன் திகைத்தான்.

தொடரும்

நா. கே. நீ. சோ. 2.

சரியான விடை:--

கி. பி. 1077ல் சீனப் பேரரசனுக்கு அரசியல் தூதனை அனுப்பிய தமிழ் நாட்டு மன்னன் முதலாம் குலோத்துங்க சோழன் ஆவான்.

இந்த விடையை அனுப்பியோர்:—

1. இரா. கல்யாணசுந்தரம், சென்னை 1. 2. கே. அசிசுல்லா பெய்க், சென்னை 2. 3. க. பிரபாகரன், சென்னை 1. 4. பெ. து. மோகனசுந்தரன், பிரம்பை. 5. மது. சு. ஜெகதீசன், மதுரை. 6. எஸ். விஜயராஜ், புதுவை. 7. ர. நாராயணசாமி, வேலூர். 8. எஸ். கணபதி, முத்துப்பேட்டை. 9. பொ. வெ. சரந்த். 10. என். அருணாசலம், சென்னை 12. 11. எம். பழனிச்சாமி, கரூர். 12. பா. சகன்னாதன், பிரம்பை. 13. இராமச்சந்திரன், கம்பம். 14. வே. கி. ரங்கபாஷ்யம், வெள்ளூர். 15. மரா. வெங்கட்ராமன், சென்னை 30. 16. நா. இளவழகன், சிவகங்கை. 17. அ. இராமசாமி, மதுரை. 18. பெ. சன்னாசி, மேலசிந்தனைச்சேரி. 19. ம. இராமச்சந்திரன், சின்னமனூர். 20. நீ. தங்கவேலன், வேலூர். 21. து. மருதப்பன், சோழவந்தான். 22. ப. சர்வேசன், வாலாஜாபேட்டை. 23. மு. வ. இராமு, கூடுவாஞ்சேரி 24. சு. பொன்னம்மாள், சென்னை. 25. ச. இராமையன், திருப்பாப்புலியூர். 26. இலா. நெடுமானஞ்சி, இறைப்பொழில் வாய்ச்சி. 27. நா. இளங்கோவன், ஆர். நாடிமுத்து, சிங்கப்பூர். 28. கே. கே. ஜானகிராமன் சென்னை. 29. நவனீதன், இராசபாளையம். 30. கா. இ. அப்துல்லத்தீப், நாமக்கல். 31. சு. தர்மலிங்கம், தூத்துக்குடி. 32. எம். சின்ராஜா, சோழவந்தான். 33. எஸ்: அயூப், குன்னூர். 34. விசுவாசம், இராசபாளையம். 35. கே. எம். முருகேசன், சூலூர். 36. இரா. சனார்த்தனம், மதுரை. 37. க. குமார், பரமேஸ்வரபுரம். 38. லி. பன்னீர் செல்வம், வையம்பாளையம். 39. ம. இராமலிங்கம், பொள்ளாச்சி. 40. பு. இளங்கோ, கிருட்டிணகிரி. 41. சு. அரங்கநாதன், செவ்வாய்ப்பேட்டை. 42. அ. அங்கமுத்து, அரியலூர். 43. வெ. உ. சுப்பையா, மேட்டுநீரேத்தான். 44. துரை. முருகேசன், ப. அரங்கப்பன், காரமடை. 45. சீவாஜி, சென்னை 1. 46. கு. சின்னத்தம்பி, கோவை. 47. அ. கோவிந்தன், நாடார் மங்கலம். 48. க. வீரி செட்டி, எளம்பள்ளி. 49. மு. இளமாறன், மதுரை. 50. எஸ். எம் ஆறுமுக நயினார், கொக்கிராகுளம். 51. கு. முத்துராமன், ஆவணிப்பூர். 52. ஞா. செந்தில் நாதன், கோபி. 53. பொ. சுப்பிரமணியம், பதுளை. 54. மா. வரதராசன். சென்னை 1. 55. கி. பா. சு. மணி, வாலாஜாபாத். 56. செ. சற்குருநாதன், வதுளை, 57. து. திருநாவுக்கரசு, அரியநாச்சி. 58. ஆ. சு. வேலாயுதம். அதியாவரத்தை. 59. மு. அ. வேலு, இலங்கை. 60. அ. கனகசபை, சு. புதுப்பாளையம். 61. ச. விசுவநாதன், சென்னை 1. 62. தி. நா. நாதமுனி, திருப்பத்தூர். 63. சீனு. காந்தா, திருப்பத்தூர். 64. எஸ். எஸ். ஆகன், குன்னூர். 65. கி. ஆழ்வார், தூத்துக்குடி. 66. பொ. ம. வாணி அழகரசன். 67. ப. குணசேகர், கோவை. 68. கொ. ஞானசிவசுப்பிரமணியம், சி. கோ. காஞ்சிமணி, கண்ணியப்பன், அமைதிலால், பெரம்பூர். 69. சாமி. சௌந்தர், தூத்துக்குடி. 70. கு. செல்வராசு, மதுரை. 71. பூங்காவனம், சென்னை 7 72. த. சுந்தர் சிங், மதுரை. 73. மா. கி. இராமலிங்கம், சென்னை 7. 74. மு. இராதாகிருஷ்ணன். 75. சு. கிருட்டிணமூர்த்தி, மதுரை. 76. சௌந்தரபாண்டியன். தூத்துக்குடி. 77. எ. கே. வில்லவன்கோதை, மோகனூர் 78. ப. செயசந்திரன், அம்மையப்பன். 79. பே. ஏசுதாசன், மதுரை. 80. பெ. ச. பாலசுப்பிரமணியன், சிவகங்கை. 81. த. இராசகுரு, திருப்பாப்புலியூர். 82. வெ. இறையழகன், ஆயக்குடி.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நகரமே உயிர் பெற்றுத் திகழ்ந்தது. சரியாக ஒரு மணிக்கு நகரத்தை அடைந்தோம்.

நான் பல்லக்கைவிட்டு இறங்கி நடந்துசென்றேன். அங்கே சத்திரத்திலிருந்து வந்த ஒரு நண்பரைச் சந்தித்தேன். பல்லக்கு சுமந்து வந்த கூலிகளுக்கு உரிய தொகையுடன் மேலும் இரண்டு ரூபாய்கள் அதிகமாகக் கொடுத்தேன். ஏனெனில் அவர்கள் பல்லக்கு சுமப்பதுடன் நான் ஏவிய சிறு வேலைகளையும் செய்தார்கள்.

எனக்கு இரண்டு மாத வேலை அங்கிருந்தது. வேறு தனி வீடு எனக்குக் கிடைக்கும் வரை என் நண்பர் வீட்டில் தங்கினேன். நகரத்தில் நான்கு வாசல்களும், அகண்ட சில வீதிகளும், குளிக்குமிடங்களும், கோயில்களும், மசூதிகளும் இருந்தன. இந்துக்களும், முஸ்லீம்களும் நிறைந்த அந்த நகரத்தில் ஆர்மீனியர்களும் இருந்தார்கள். ஆங்கிலேயர்களின் ஒற்றர்களாக ஆர்மீனியர்கள் கருதப்பட்டார்கள். நடன சிங்காரிகள் நிறைந்த நகரம் மசூலிப்பட்டிணம்.

எனக்கும் வேறு வீடு கிடைத்தது. ஆனால் மசூலிப்பட்டணத்தில் வெயிலின் கொடுமையை அனுபவித்துக்கொண்டு நீண்ட நாட்கள் தங்கியிருக்க முடியவில்லை. அதனால் என்னுடைய வேலையை முடித்துக் கொண்டு, விரைவில் சென்னைக்குச் சென்றுவிட்டேன்!

—தமிழாக்கம்: க. நா.

◉

தேவை

1. ஜப்பான் அல்லது ஹாங்காங் சிங்கிள் டெம்மி சிலிண்டர் மிஷின் (Second hand) தேவை.
2. கட்டிங் மிஷின் 24" (Foreign or Indian Second hand) தேவை:

வைத்திருப்பவர்கள் விண்ணப்பிக்க:

N. V.
c-o 'தென்றல்'
சென்னை-6.

தென்றல்

பேராசிரியர் மலர்!

பல அறிஞர்கள் எழுதுகின்றனர்.

விலை அணா 8 தான்!

ஏஜண்டுகள் முன்பணம் அனுப்பி பதிவு செய்துகொள்க.

விவரங்களுக்கு:

தென்றல்
சென்னை-6.

ஜெகதாவின் சிந்தனைக் காவியங்கள்!
புதிய வெளியீடுகள்!

இளங்கிரன் எழுதியவை

வண்ணக்குமரி	1—8—0
கள்ளத்தோணி	0—8—0

ஏ. கே. வேலன்

ஐந்து இரவுகள்	0—4—0

வியாபாரிக்கு 25 பெர்சண்ட் கழிவும் தபால் செலவு இலவசம்

ஜெகதா பதிப்பகம்
தெப்பக்குளம் :: திருச்சி

செங்கோட்டை
இன்றைய ஆட்சியின் படப்பிடிப்பு
விரைவில் 'தென்றல்' இதழில்
எதிர்பாருங்கள்!

இராமன் வணங்கத்தக்கவனா?

சருக்கம் 18. சுலோகம் 17.

நீ என்னால் எதுகாரணமாகக் கொல்லப்பட்டாயோ அதாகின்ற இதை அறிந்துகொள் புராதனமான தர்மத்தை விட்டுவிட்டு தம்பியின் மனைவியிடத்தில் குலாவுகின்றனை.

இப்படிச்சாற்றுகின்றகுற்றமாவது உண்மையா என்பதை கவனிப்போம். மாயாவி என்னும் அரக்கனைக் கொல்ல வாலி ஒரு குகைக்குள் செல்லுகின்றான். வெளியில் தம்பி சுக்ரீவனை நிறுத்திவிட்டு செல்லுகின்றான். உள்ளே சென்ற வாலி நீண்ட நேரமாகியும் வெளியே வரவில்லை. இரத்தம் ஆறுபோல ஓடிவருகின்றது. அதைக் கண்ட தம்பி என்னசெய்திருக்கவேண்டும்? பதைபதைத்தவனாய்தமயனைத்தேடி அல்லவா உள்ளே சென்றிருக்க வேண்டும்; சகோதரத்துரோகியான சுக்ரீவன் உடனே வாலி இறந்துவிட்டிருப்பான் என்று முடிவு செய்து கொண்டானாம். உடனே என்ன செய்திருப்பான் என்று எண்ணுகின்றீர்கள்? தமயனைக் கொன்ற மாயாவியைக்கொன்று பழிதீர்க்க அவனைத் தேடிச் சென்றிருப்பான் என்றுதானே ஊகம் செய்கின்றீர்கள்? அதுதான் தவறு. சகோதரத் துரோகியான சுக்ரீவன் அப்படியெல்லாம் செய்வானா? பலத்த கற்களைக் கொண்டு குகை வாயிலை அடைத்துவிட்டு கிஷ்கிந்தை திரும்பி முடிசூட்டிக் கொள்கின்றான். மாயாவியைக் கொன்று விட்டுத் திரும்பிய வாலி குகைவாயில் அடைபட்டிருப்பதைக் கண்டு அடங்காச்சினம் கொண்டு குகைவாயிலை தகர்த்தெறிந்து விட்டு வெளிவருகின்றான். வந்தவன் சுக்ரீவனை அரசனாகக் காண்கின்றான். உடனே அந்த சகோதரத்துரோகியை நாட்டைவிட்டு ஓட்டிவிடுகின்றான். அவ்வளவே அவன் செய்தது. இதை சுக்ரீவனும் பின்னால் வாலி இறந்துபட்டவுடன் ஒப்புக் கொள்கின்றான். அதைப் பின்னர் கவனிப்போம். ஆனால் இராமன் கூறியபடி தம்பியின் மனைவியை வாலிகவர்ந்து கொண்டான் என்பதற்கு இராமாயணம் முழுவதும் ஒருசான்று கிடையாது. வாலி சுக்ரீவன் மனைவியோடு கூடிக்களித்ததாக ஒரு காட்சி கூட அங்கே காணக்கிடையாது. ஆனால் அதற்கு நேர் எதிரிடையாக சுக்ரீவன் அண்ணன் மனைவியான தாரையோடு கூடிக்களித்து கூத்தாடிய காட்சிகள் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன.

முடிசூடிக்கொண்ட சுக்ரீவன் இராமனுக்குத்தந்த வாக்குறுதியை மறந்து அண்ணியான தாரையுடன் சிற்றின்ப வேட்டையில் திளைத்து விடுகின்றான். அப்பொழுது இலக்குவன் சுக்ரீவனைக் கண்டு அவனது கடமையை நினைவுறுத்த வருகின்றான். அப்பொழுது அவனது வரவை சுக்ரீவனிடம் சென்று வானரர்கள் கூறுகின்றனர்.

சருக்கம் 31 சுலோகம் 19

அப்பொழுது பெண்பித்தனாக தாரையோடு கூடி ஏகாந்தத்தில் மூழ்கிக்கிடந்த வானரோத்தமனான சுக்ரீவன் அந்த வானர வீரர்களின் சொல்லை காதில்போட்டுக்கொள்ளவில்லை.

இலச்குவன் கடுங்கோபத்தோடு உள்ளே வருகின்றான். அவனை சமாதானப்படுத்த சுக்ரீவன் தாரையை அனுப்புகின்றான்.

சருக்கம் 33 சுலோகம் 22

"கட்டழகியான நீயே அவரை நேரில் போய்ப் பார்க்கவேண்டும். போய் கோபசாந்தியை விளைவிக்கத் தக்க வார்த்தைகளால் அருள் புரியச் செய்யக்கடவாய்."

உடனே தாரை புறப்பட்டுச் செல்லுகின்றாள். அதுவும் எந்த நிலையில் என்பதை வால்மீகியே கூறுகின்றார்.

சுலோகம் 25.

அந்தத் தாரை **தள்ளாடி நடக்கின்றவளாய், குடி மயக்கத்தால் சொருகும் கண்களை உடையவளாய், நழுவிக்கிடந்த ஒட்டியாணமும், பொன்னூலும் உடையவளாய், குனிந்து வணங்கிய மேனியளாய்** லட்சுமணரிடம் போய்ச் சேர்ந்தாள்.

இவ்வாறு சுக்ரீவன் அண்ணியான தாரையை தாரமாகவே ஆக்கிக்கொண்டான் என்பதை இலக்குவன் வாயிலாக வால்மீகி தெரிவிக்கின்றார். தன்முன் வந்து வணங்கிய தாரையை நோக்கி இலக்குவன் பின்வருமாறுகூறுகின்றான்.

சுலோகம் 30

கணவனுக்கு நன்மை செய்வதில் ஆசக்தி உடையவளே, உனது **கணவனாகும் இவன் காமத்திலீடுபட்டவனாய்** தர்மம், முயற்சி எல்லாவற்றையும் முற்றும் மறந்தவனாய் இருக்கின்றான். இவனை ஏனோ உள்ளபடி அறியாது இருக்கின்றாய்.

படித்தீர்கள் அல்லவா? யார் குற்றவாளி என்பதை புரிந்துகொண்டீர்களா! சகோதரன் மனைவியைக் கூடியது சுக்ரீவனாஅல்லது வாலியா என்பது விளங்கவில்லையா? மாற்றான் மனைவியை அபகரித்தாய் அதனால் மரணம் எய்தினாய் என மகா யோக்கியன்போலக் கூறிய இராமன் ஏன் இந்த இழிசெயல் தன் கண்ணெதிரிலேயே நடக்கும் போதுசுக்ரீவனைத்தண்டிக்கவில்லை? கணவன் இறந்த பிறகு மானங்கெட்டவளாய் மைத்துனனோடு தகாத உறவுகொண்ட தாரை ஏன் தண்டிக்கப்படவில்லை? நீதிஎன்றால் எல்லோருக்கும் பொதுவானது தானே? இதிலிருந்து என்ன தெரிகின்றது? வாலிமீது இராமன் சாற்றிய முதல் குற்றம் பொய்யாகின்றது. அடுத்தாற்போல சுக்ரீவனின் அந்தரங்க எண்ணமான அரசைக் கவரும் ஆசையை அறிந்து கொண்ட இராமன் இவனைப் போன்ற துரோகிகளின் உதவிதான் தனக்குத் தேவை என்று நிச்சயித்தவனாய் வாலியை வஞ்சகமாகக் கொன்றான். இதற்குக் கம்பரடிப்பொடி ஆழ்வார்கள் என்ன பதில் சொல்லுவார்கள்? இந்தக் கூற்றை உறுதிசெய்யும் வகையில் இராமனே கூறுகின்றான்.

சருக்கம் 18 சுலோகம் 26.

லட்சுமணனோடு எப்படியோ அப்படி சுக்ரீவனோடு எனக்கு ஏற்பட்ட நட்பு. **மனைவிக்காகவும், ராஜ்யத்திற்காகவும் அவன்தான் எனக்கு நலம் புரிபவன்.**

இன்னும்அடுத்தபடியாகஇராமன் தான் இழைத்த பாதகத்திற்குக் கூறும் காரணம் வியப்பை அளிக்கின்றது. சுக்ரீவனுக்கு வாலியைக் கொல்வதாக வாக்குக் கொடுத்துவிட்டதாகவும் அதை நிறைவேற்றவே வாலியைக் கொன்றதாகவும் கூறுகின்றான்.

சருக்கம் 18 சுலோகம் 27.

"அப்பொழுது வானரர்கள் முன்னிலையில் என்னால் பிரதிக்ஞையும் அளிக்கப்பட்டது. என்போன்றவனால் பிரதிக்ஞையானது புறக்கணிக்க எப்படித்தான் முடியும்."

யாருக்கு யார், எதற்காக, எங்கே வந்து எப்படி வாக்குக் கொடுப்பது? நாடற்ற ஆண்டியாகிய இராமன், தந்தையால் காட்டிற்கு அனுப்பப்பட்ட இராமன், வாலியின் அரசாட்சிக்கு உட்பட்ட நாட்டில், அவனைக் கொல்வதாக, தன்னைப் போலவே நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட சுக்ரீவனுக்கு வாக்குக் கொடுக்கின்றானாம்! எப்படி இருக்கிறது யோக்கியதை? சரி ஏதோ ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதாக உடன்பாடு செய்துகொண்டார்கள் என்றாலும், நேருக்கு நேராக முறையான வகையில் அல்லவா போர்புரிந்து தனது வாக்கை நிறைவேற்றியிருக்கவேண்டும்? அதை விட்டுவிட்டு மரத்தின்பின் மறைந்து கொண்டு பாணமெய்வதா வாக்கை நிறைவேற்றும் வழி? முதலில் ஆராயாது வாக்குக் கொடுத்ததே தவறு. பிறகு வாக்கு கொடுத்த பின் அதை நேர்வழியில் நிறைவேற்ற முயன்றிருக்க வேண்டும். அதைவிட்டுக் குறுக்கு வழியில், கோழைத்தனமாக முறை தவறி இராமன் நடந்துகொள்கின்றான்.

இனி அடுத்தபடியாகத் தனது முறையற்ற செயலுக்கு அறிவுக்குப் பொருந்தாத காரணம் காட்டுகின்றான் இராமன்.

சருக்கம் 18 சுலோகம் 38.

வானர! நீயோ போரில் எதிரில் நின்று போர் புரிபவனாக இருந்தாலும்சரி, எதிர்க்காதவனாக இருந்தாலும் சரி, துஷ்ட மிருகங்களின் வகுப்பில் ஒருவனாகஇருக்கின்றனை. எனவேதான் என்னால் ஒரு கணையால் அடிக்கப்பட்டாய்.

இராமன் கூறும் இந்த விசித்திர காரணத்தை எண்ணும்போது நகைப்பு மேலிடுகிறது. கீழ்க்கண்ட வினாக்கள் எழுகின்றன. வாலி மிருகமாக இருந்தால் மிருகம் பேசுமா? ஆடை ஆபரணங்கள் அணியுமா? அரசுமுறை உண்டா? கிஷ்கிந்தை போன்ற நாடுநகரங்களை எங்ஙனம் உண்டாக்கின? எங்ஙனம் குடி படைகளைக் கட்டி ஆண்டன? வாலி மிருகமானால் அவன் தம்பி சுக்ரீவனும் மிருகம் தானே? அவனது தோழன் அனுமனும் மிருகம் தானே? இந்த ஐந்தறிவு படைத்த மிருகங்களின் பேச்சை நம்பி, அவைகளின் சண்டையில் ஆறறிவு படைத்த இராமன் எப்படி இறங்கினான்? மிருகமான சுக்ரீவனின் உதவியையும் அவனது படைகளின் உதவியைக் கொண்டுந்தானே கடவுளான இராமன் இராவணனை வெல்ல முடிந்தது? எல்லாம் வல்ல அவதாரமாகிய இராமனுக்கு இது இழிவைத் தராதா? இந்த ஐந்தறிவு படைத்த மிருகங்களுடன் தோழமை பூண்டு திரிந்த இராமனின் ஆறறிவைக் குறித்து சந்தேகம் எழுகின்றதே? ஆரியர்களின் இந்த திரித்துக் கூறலை பண்டித நேருவும் Letters to Indra Gandhi என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார். "தென்னாட்டில் வாழ்ந்து வந்த திராவிடப் பெருங்குடி மக்களையே இராமாயணத்தில் வானரர்களென்றும், அரக்கர்கள் என்றும் தஸ்யுக்கள் என்றும் இழிவாகக்குறிப்பிட்டு இருக்கின்றது." இந்த உண்மையை வரலாற்று ஆசிரியர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

—: ப. நெடுமாறன் :—

இங்ஙனம் இராமன் வாலியை கோழைத்தனமாகத் தாக்கி கொலை செய்தது அநீதியான செயலென தெள்ளிதின் தெற்றென புலனாகின்றது. இதற்கு ஆதரவாக வீரனான வாலி உயிர்நீத்தவுடன் துரோகியான சுக்ரீவன் நெஞ்சை வேதனை அரிக்க, வெட்கம்விலாவைக் குத்த புலம்புகின்றான். அப்பொழுது சில உண்மைகளையும் கூறிவிடுகின்றான்.

(முற்றும்)

வெண்பாப் போட்டி 6

இரட்டைப் புலவர் முறை

[கீழ்க்காணும் முதலிரண்டு அடிகளை, தான் ஒரு புலவராக நின்று தென்றல் தருகிறது. தனிச்சீருடன் பின் இரண்டடி எழுதி முடித்து அனுப்புக:-]

முதலிரு அடிகள்:

கார்கூந்த லேறிக் களித்திருந்த மல்லிகையே

ஆர்செய்த வஞ்சகத்தால் அல்லலுற்றாய்?—

முடிவு தேதி 2-4-55

நீதிபதி 'சகி' தென்றல் : : சென்னை-6.

கழகச் செய்திகள்

◉ சென்ற 20-3-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு கோடம்பாக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கோடம்பாக்கத்தில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் கூட்டம் தோழர் இளங்கீரன் அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது. அவ்வமயம் தோழர் ரகுநாத் உள்பட பல தோழர்கள் பேசினர். கடைசியாக தோழர் கண்ணதாசன் அவர்கள் நீண்டதொரு சொற்பொழிவாற்றினார்கள். அவர் தம் பேச்சில், ஐந்தாண்டுத் திட்டத்தால் தென்னகம்—திராவிடம் எந்த அளவு தாழ்வுறுகிறது, எந்த அளவு புறக்கணிக்கப்படுகிறது என்பதையும், ஆனால் அந்த நேரத்திலே வடநாடு எந்த அளவிற்கு வளம் உள்ள நாடாகிறது என்பதையும் விளக்கிச் சொன்னார். பின்னர் தலைவர் நன்றிகூற கூட்டம் இரவு 9 மணிக்கு முடிவடைந்தது.

◉ 20-3-55 அன்று காலை 9 மணிக்கு ஆள்வார்ப்பேட்டை அறிவு வளர்ச்சி மன்றத்தின் சார்பில் ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் கூட்டம் திரு. இரா. அகமழகன் தலைமையில் நடைபெற்றது. அப்பொதுக் கூட்டத்தில் தோழர் தமிழ்ப்பித்தன் (தென்றல் துணையாசிரியர்), தோழர் அருணன், தோழர் முத்துராமன், தோழர் செலைப் பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இந்திய அரசியலார் தயாரித்திருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் திராவிடம் புறக்கணிக்கப் பட்டிருப்பதைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேறியது.

◉ மேலப்பாளையம் தி. மு. க. உறுப்பினர் கூட்டம் 2-3-55 மாலை தோழர் டி. என். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் நா. சங்கரலிங்கம் தலைமையில் தோழர்கள் டி. என். ஆறுமுகம், செகாமுயூசப், கு. வெ. லெட்சுமணன், நா. சங்கரலிங்கம், ஜி. செல்வன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

◉ கடந்த 6-3-55 அன்று பிற்பகல் 2 மணிக்கு பெங்களூர் பிளாக் பள்ளி தி. மு. க. கட்டடத்தில் மாநாட்டு வரவு செலவுக் கணக்கைப் பரிசீலனைக்குழு பரிசீலித்து ஏற்றுக் கொண்டது. அத்துடன் மாநாட்டு வரவேற்புக் குழுவும் கலைக்கப்பட்டது. செயலாளர் ஏ. டி. பிரான்சிஸ் நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

◉ இரமங்கலம் தி. மு. க. துவக்க விழாப் பொதுக்கூட்டம் 17-3-55 அன்று தோழர் கொ. ப. சுப்பையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், கே. அடைக்கலம், என். எஸ். இளங்கோ, ம. சொ. சிவகுருநாதன், கரூர் கிட்டு, ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

◉ 25-3-55 மாலை 6 மணிக்கு, சூளை ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில் சௌந்திர பாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் தோழர் மு. மாசிலாமணி அவர்களின் தலைமையில் தோழர் எஸ். எஸ். ராஜேந்திரன், தோழர் ஆர். எஸ். பாண்டியன், தோழர் கண்ணதாசன் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

◉ சென்னை 42வது வட்ட தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் 27-3-55 ஞாயிறு மாலை 4 மணிக்கு கழகப் பொது மனையில் நடைபெறும். அதுபோது கிளையின் தேர்தல் நடைபெறும். உறுப்பினர்கள் தவருது வரவேண்டும் என்று செயலாளர் நீல. நாராயணன். தெரிவித்துக் கொள்கிருர்.

◉ 27-3-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு திண்டுக்கல் வ. உ. சி. திடலில் தோழர் இளங்கண்ணன் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் தோழர் டி. கே. சீனிவாசன், தோழர் பி. சமதர்மம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். அன்று இரவு 10 மணிக்கு பாண்டியன் நாடக மன்றத்தாரால் 'எடுத்துக் காட்டு' என்ற நாடகம் நடத்தப்படும்.

◉ 43வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பாக 27-3-55 அன்று காலை 9 மணிக்கு சைவ முத்தையா முதலி தெருவில் (வள்ளுவர் வாசக சாலையில்) ஐந்தாண்டுத் திட்டக் கண்டனக் கூட்டம் நடைபெறும். அதன் பின்னர் கழகத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும். உறுப்பினர்கள் யாவரும் தவருது வரவேண்டும் என்று செயலாளர் மு. புரட்சிமணி கேட்டுக்கொள்கிருர்.

தூத்துக்குடி நகர தி.மு. கழக கிளைத் தேர்தல்

தூத்துக்குடி நகரத் தி. மு. க. கிளைத் தேர்தல் 27-3-55 ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணி அளவில் தூத்துக்குடி வடக்கூர் பார் கிளப்பில் நடைபெறும். சென்னைத் தோழர் கே. எம். கண்ணபிரான் தேர்தல் ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைப்பார். தூத்துக்குடி நகர எல்லைக்குள் 28-2-55-ம் நாளுக்கு முன் உறுப்பினரான தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் கூடி தேர்தலைச் சிறப்பாக நடத்துவார்களாக.

சி. என். அண்ணுதுரை.
பொதுச் செயலாளர்

'அறிவகம்', சென்னை.
20-3-55

நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கி யத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்த காலை
மதுக்கோப்பை கரத்திலேந்திக் குடியன் காணும்
மாருத கனவுலகம் காட்சி யாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத் தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

தமிழர் திருமணத்தில் தாலி

இன்றுள்ள தமிழ்மக்களிடம் திருமணத்தின்போது தாலி கட்டும் வழக்கம் இருந்து வருகிறது. இப்பழக்கம் தமிழ்நாட்டாரிடம் எப்போது தோன்றியது, எவ்வாறு தோன்றியது, தாலி என்ருல் பொருள் என்ன என்பவற்றை இலக்கியம், இலக்கணம், வரலாறு, வழக்காறு முதலியவற்றைக் கொண்டு ஆராய்ச்சி செய்திருக்கிருர் டாக்டர் மா. இராசமாணிக்கனர்.

சங்க நூல்களிலும் சரி, இடைக்கால நூல்களிலும் சரி 'மங்கல அணி' என்பது தாலி என்ற பொருளில் வரவில்லை. 'இயற்கை அணி' என்ற பொருளிலேதான் வந்துள்ளது. மேலும் தாலி என்பது, சிறுவர் சிறுமியர் அணியும் அணி விசேடமாகும். சிந்தாமணியில் குறிப்பிடப்பட்டுள்ள தாலி என்ற சொல்கூட, இன்று கூறப்படும் பொருளில் அன்று குறிப்பிடப்படவில்லை. இலக்கணப்படி பார்த்தாலும் தாலி என்பது தொங்குதலையுடைய ஒருவகை அணி என்று தான் பொருள் படுகிறது. சாதாரணமாக அணியப்பட்ட புலிப்பல் தாலி போன்ற அணிகள், கி. பி. 11-ம் நூற்றுண்டு முதல் தமிழகத்தில் திருமணத்திற்குரிய சிறப்பு அணிகலன்களாக மாறிவிட்டன.

இந்த அரிய ஆராய்ச்சி நூலை டாக்டர் மா. இராசமாணிக்கனர் எம். ஏ. எல். டி., எம். ஓ. எல் அவர்கள் அழகுபட எழுதியிருக்கிருர்கள். விருப்பு, வெறுப்பற்ற முறையிலே ஆராய்ச்சி செய்திருக்கிருர்கள். தமிழகத்திற்கு இத்தகைய ஆராய்ச்சி நூல்களை ஆசிரியர் மேலும் எழுதுவார் என்று எதிர்பார்க்கிறேம். இந்தச் சிறந்த நூலை எல்லோரும் படித்தல் வேண்டும். குறிப்பாக, தாலி பற்றி தவருன கொள்கையுடையோர் படித்துப் பயன்பெற வேண்டுகிறேம்.

வெளியிட்டோர்:
செல்வி பதிப்பகம்
காரைக்குடி
விலை ரு 1-8-0

★

கண்மணி

நாடக நடிகர்கள் வாழ்விலும் இன்பமும் துன்பமும்இருக்கத்தான் செய்கின்றன. நடிகர்கள் என்ருல் அவர்களுக்கு உண்மைக் காதல் கிடையாது என்று பொருளல்ல. அவர்களும் மனிதர்கள் தாம். எனவே அவர்களுக்கும் வாழ்விலே நாட்டம் உண்டு, காதலிக்க உரிமையுண்டு. காதல் கைகூடுமோ, கூடாதோ அது வேறு பிரச்சனை! இக்கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு இந்த நவீனம் தீட்டப்பட்டிருக்கிறது.

கண்மணி ஒரு நாடக நடிகன். புவன சுந்தரியாக மாறிய கற்பகந்தான் அவன் காதலிக்கும் பெண்ணுகின்ருள். அவர்கள் காதல் ஈடேற வழியில்லை! எவ்வளவோ இடைஞ்சல்கள்! இறுதியில் இருவரும் பிரியநேருகிறது. வில்லன் ஒருவனுல் கற்பகம் இறந்துவிடுகிருள். கண்மணி கலங்குகிருன், கண்ணீர் வடிக்கிருன்.

இந்தச் சோகக் கதையை அழகுபட எழுதியிருக்கிருர் திரு. எஸ். எஸ். தென்னரசு. கதையின் பாத்திரங்கள் தாமே பேசுவதாக அமைத்திருக்கும் விதம் பாராட்டுதற்குரியது. கதையிலே ஓட்டம் இருக்கிறது. கற்பகம் இறந்துவிட்டாள் என்று எல்லோரையும் நம்பச்செய்து, பிறகு அவள்தான் புவனு என்று கூறி, படிப்போரை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிருர். நடை மனதைக் கவர்கிறது.

வெளியிட்டோர்: **அருணுேதயம்**
13, நல்லண்ண முதலி சந்து,
சென்னை 14
விலை ரு 1-0-0

★

தேசீய கீதம்

இன்றைக்கு இருபது ஆண்டுகட்கு முன்னர், நாட்டில் விடுதலை இயக்கம் பலம் பெற்றிருந்த நேரத்தில், மக்கள் தேசீய கீதத்தை விரும்பினர். கதர் இயக்கத்தை வளர்ச்சி பெறச் செய்ய, கதர் இராட்டினப் பாட்டுகள் தேவைப்பட்டன. அவை பலரால் எழுதப்பட்டன. அவற்றுள் பாரதியார் எழுதியவை சிறந்தனவாக இருந்தன. அடுத்து, பாரதி வழிவந்த முதற் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய தேசீய கீதத்தைக் குறிப்பிடலாம். இருபது ஆண்டுகட்கு முன்பு, இன்றுள்ள கொள்கைக்கு முரணுக எழுதிய தேசீய கீதத்தை இப்போது தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர் முல்லைப் பதிப்பகத்தார். புரட்சிக் கவிஞர் எழுதிய 'சக்திப் பாட்டின்' மொழிபெயர்ப்பான **'The Mother's Magesty'** என்ற ஆங்கிலப்பாடல் அழகுற அமைந்திருக்கிறது.

விற்பனை உரிமை
கலைச்சோலை நிலையம்
துறையூர், திருச்சி மாவட்டம்
விலை அணு 8

— தமிழ்ப்பித்தன்

ன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், எம்.ஏ., எல்.டி.

பதில் தருகிறார்.

ாரா, தஞ்சை.

அறம்செயவிரும்பு "--ஔவையார்
ரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
ரந்து கெடுக-உலகயற்றியான்
—திருவள்ளுவர்

இவ்விருபாக்களிலும் "ஔவை" றம்செய ஆசைப்படு என்றும், வள்ளுவன்" இரக்க நேரினும் றத்தலே நன்று என்றும் கூறி ள்ளார்கள். இவ்விருவரின் ருத்துக்களில் முரண்பாடு இருப்ப ாக எங்களுக்குத் தெரிகிறது.

அறம் என்பது ஐயமிடுதல் அல்ல. து ஒழுக்கத்தைக் குறிப்பது. ஆகவே "அறம்செய விரும்பு," ன்பதற்கு குறள் மாறுபட்டதல்ல.

◉

ரியகாாதி, திண்டுக்கல்.

(1) நாடகம், கூத்து இந்த ரண்டு சொற்களும் ஒரே பொருளை ணர்த்துபவைகளா? தனித்தனிப் பாருள்களை உணர்த்துபவைகளா?

(2) "பார்ப்பனர்களெல்லாம் மிழர்கள்தான்" என்று புரட்சிக் விஞர் புகன்றது உண்மையா? ண்மையெனில் அதுபற்றி தங்கள் ருத்தென்ன?

(1) கதை தழுவிய கூத்து நாட ம். இரண்டும் ஏறக்குறைய ஒரே பாருளில் வழங்கப்படுவதுமுண்டு.

(2) மொழியால் பார்ப்பனர் மிழர். இனத்தாலல்ல. ஆயினும் மிழர் பண்பாட்டை ஏற்ருல் அவர் ளைத் தமிழர்களாகக் கொள்ளத் டையில்லை. தமிழனுக்கு இன வற்றுமை இடையாது. தன்னினப் ண்பு மட்டும் உண்டு.

◉

ாஷா மோய்தீன்,
புதுப்பேட்டை ஆத்தூர்.

பழையன கழிந்து, புதியன குந்து, நாடு நல்லாட்சி பெற்று ன்றென்றும் பிறநாடுகளிடை லைநிமிர்ந்து நிற்கவேண்டுமோயின் ாம் செய்யவேண்டுவது என்ன?

முற்போக்கு இயக்கங்களில் சர்ந்து தொண்டாற்றுக.

◉

ாசு, கே. புரம்

மன்னர் விழித்தா மரைபூத்த
மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை
போய்ப்புக்காள்.........

இச்செய்யுளின் விடப்பட்ட அடி களை எழுதி இதற்கு விளக்கமாக ரை தருக.

விடுபட்ட அடிகள்:.
............—மின்நிறுத்த‌ச்
செய்யதாள் வெள்ளைச்சிறை
யன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே
போன்று

இனிய தாமரைக்குளம். செந்தாமரைகள் பூத்திருக்கின்றன. அன்னம் சிவந்த காலையுடையது. ஆனால் வெள்ளை நிறமுடையது. அது வெள்ளை மின்னல்போல் பறந்து வருகிறது. தாமரைகள் ஒவ்வொன்றும் "அன்னம் என்மீதுஉட்காரும், என்மீது உட்காரும்" என்று எதிர் நோக்குவதுபோல் ஆடுகின்றன. கவிஞர் இந்தக் காட்சியைத் தமயந்தியின் மணத்தேர்வு மண்டபத்துக்கு உவமை கூறுகிறார். மண்டபம் செந்தாமரைக்குளம் போன்றது. மன்னர் கண்கள் தாமரை மலர்கள். மண்டபத்துக்குள் வரும் தமயந்தி குளத்தை நோக்கிவரும் அன்னப்பறவை.

◉

அண்ணு முாசோலி
மன்றத் தோழர்கள், உதகை.

தமிழ்நாட்டில் முதன் முதலில் கோயில் கட்டிய மன்னன் யார்? எந்த ஆண்டு? விளக்கம் கூறுக.

தமிழ்நாட்டில் முதல் முதல் கற்கோயில் கட்டியவன் 'சைத்யகாரி' அல்லது 'சேதகரி' (—கோயில் கட்டியவன்) என்று பெயர் பெற்ற முதலாம் மகேந்திர வர்மன் (கி. பி. 610-670) ஆவான். இவன் முன்னோன் சிம்ம விஷ்ணுவும் பின்னோர் களும் மாமல்லபுரம் குகைக்கோயில்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில் ஆகியவற்றைக் கட்டினார்கள். பல்லவர்கள் காலத்திலேயே கற்கோயில் கட்டும் வழக்கம் தமிழகத்தில் ஏற்பட்டது. ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்குமுன் (கிட்டத்தட்ட 5-ஆம் நூற்றாண்டில்) இருந்த சோழன் செங்கணான்தான் பெரிய அளவில் முதல் முதல் கோயில் கட்டியவன் என்று ஏடுகள் புகழுகின்றன. இவன் தமிழகமெங்கும் எழுபது கோயில்கள் கட்டினதாக கூறப்படுகிறது.

ஆனால் சங்க காலத்திலும் (கி. பி. 2, 3 வது நூற்றாண்டுகள்) சிறிய அளவில் மலைகளிலும் சிற்றூர்களிலும் சற்று மிகுந்த அளவில் நகரங்களிலும் கோயில்கள் இருந்தன. வீரர்களுக்காக எழுப்பிய கற்களே கோயில்களாயினவாதலால் இதுதான் முதல் கோயில் என்று எதையும் சுட்டிக் கூறமுடியவில்லை.

◉

ஆர். எஸ். பிரகாசம், பாமக்குடி.

(1) சிலப்பதிகாரம் காதை 14, வரி 65ல் கரந்துபடை என்று காணப்படுகிறதே. கரந்துபடை என்றால் என்ன?

(2) ஏரி இரண்டும் சிறகா
எயில்வயிறக்
காருடைய பீலி கடிகாவா—
நீர்வண்ணனன்
அத்தியூர் வாயா அணிமயிலே
போன்றதே
பொற்றேரான் கச்சிப்
பொலிவு.

இப்பாட்டு தண்டியலங்கார மேற்கோள் பாடலில் வருகிறது. இது ஒரு ஊரைக் குறிப்பது போலுள்ளது. இது எவ்வூர்? இப்பாட்டின் பொருள் என்ன? விவரமாக எழுதுங்கள்.

(1) வரியும் காதை எண்ணும் சரியாகக் கூறும் அன்பரே.

(2) ஊர்ப்பெயர் பாட்டிலேயே உள்ளது. கச்சி என்பது காஞ்சி அதன் அமைப்பு முறையை இப்பழைய வெண்பா விரித்துரைக்கிறது நகரம் மயில் உருவை யொத்தது. இரண்டு புறமும் இரண்டு ஏரிகள் இருந்தன. அவை இரண்டு சிறகுகள் போன்றவை. கோட்டை (எயில்) வயிறு போன்றது. காவற்காடு மயில் தோகை போன்றது. அத்தியூர் வாய் போன்றது.

◉

இரோ. மணாளன், கோவை.

"அறவாழி அந்தணன்
தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"
பிறவிப் பெருங்கடல்
நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

இந்த இருகுறளிற்கும் பொருள் கூறவும்.

அறத்தின் கடல் (அறவாழி) போன்ற அன்புருவாம் இறைவன் வழிநின்று வழிபட்டவர்களுக்குத் தான், (அறம் பொருள் இன்பம் என்ற முப்பெரு வாழ்க்கைக் கூறுகளுள்) மற்ற இரண்டு கூறுகளாகிய கடல்களையும் நீந்தி அவற்றின் பயனாகிய கரையை அடைவது முடியக்கூடியது. மற்றவர்களுக்கு அது முடிவதன்று.

◉

நா, இளங்கோவன், சீங்கை 8.

நான் கீழே கொடுத்துள்ள பாடலின் முழுப்பாடலையும் யார் யார் பாடியது, எந்தப் புத்தகத்தில் யாரைப்பற்றி? முழுப்பாடல் முழுப் பொருளையும் கூறுக.

"நீடுங்குடையைத்
தரித்தபிரானிந்த நீணிலத்தில்
பாடும்புலவர் புகழொட்டக்கூத்தன்
பதாம்புயத்தைச்."

ஒட்டக்கூத்தர் சோழன் புகழ் பாடத் தொடங்கி இரண்டு அடி பாடி, சற்றுத் தயங்க, இதைப் பயன்படுத்திக் கூத்தர் புகழாக, மன்னன் முடித்த பாட்டு என்று கூறப்படுகிறது இப்பாட்டு.

கூத்தர்
ஆடுங்கடைமணி நாவசையாமல்
அகிலமெல்லாம்
நீடுங்குடையில் தரித்தபிரான்,
இந்த நீணிலத்தில்
சோழன்
பாடுங்கவிப்பெருமான்
ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங்குலோத்துங்கசோழன்என்றே
என்னைச் சொல்லுவரே!

◉

நா. அருண்மொழி, கரூர்.

96 வகைப் பிரபந்தங்கள் பெயர்களும் இன்று வழக்கில் இலங்கும் அவற்றின் பெயர்களையும் எழுதுகின்றீர்களா?

பிரபந்தங்கள்பெரும்பாலன பிற்காலத்தில் பெருக்கப்பட்டவை. 96 என்ற தொகையும் பிற்காலத்தில் எழுந்ததாகவே இருக்கலாம். சில பழமையானவையே.எனவே இன்று வழக்கில் இலங்கும் பெயர் வேறு கூறுவதற்கில்லை.

96 பெயர்களும் வேண்டுமா? இதோ! சாதகம், பிள்ளைக்கவி, பரணி, கலம்பகம், அகப்பொருட் கோவை, ஐந்திணைச் செய்யுள், வருக்கக்கோவை, மும்மணிக் கோவை, அங்கமாலை, அட்டமங்கலம், அனுராகமாலை, இரட்டைமணி மாலை, இணைமணிமாலை, நவமணி மாலை, நான்மணிமாலை, நாமமாலை, பல்சந்தமாலை, கலம்பகமாலை, மணி மாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சி மாலை, வருக்கமாலை, மெய்க்கீர்த்தி மாலை, காப்புமாலை, வேனில்மாலை. தாரகைமாலை, உற்பவமாலை, தானைமாலை, மும்மணிமாலை, தண்டகமாலை, வீரவெட்சிமாலை, வெற்றிக்கரந்தை மஞ்சரி, போர்க் கெழுவஞ்சி, வரலாற்று வஞ்சி, செருக்களவஞ்சி, காஞ்சிமாலை, நொச்சிமாலை, உழிஞைமாலை, தும்பைமாலை, வாகைமாலை, வாதோரணமஞ்சரி, எண்செய்யுள், தொகை நிலைச்செய்யுள், ஒலியலந் தாதி, பதிற்றந்தாதி, நூற்றந் தாதி, உலா, உலாமடல், வளமடல், ஒருபா ஒருபது இருபா இருபது, ஆற்றுப்படை, கண்படைநிலை, துயி லெடை நிலை, ஊரின்னிசை, பெய ரின்னிசை, பெயர்நேரிசை, ஊர் நேரிசை, ஊர்வெண்பா, விளக்கு நிலை, புறநிலை, கடைநிலை, கையறு நிலை, தசாங்கப்பத்து, தசாங்கத் தயல், அரசன்விருத்தம், நயனப் பத்து, பயோதரப்பத்து, பாதாதி கேசம், கேசாதிபாதம், அலங்கார பஞ்சகம், கைக்கிளை, மங்கல வெள்ளை, தூது, நாற்பது, குழ மகன், தாண்டகம், பதிகம், சதகம், செவியறிவுறூஉ, வாயுரை வாழ்த்து, புறநிலை வாழ்த்து, பவனிக்காதல், குறத்திப்பாட்டு, உழத்திப்பாட்டு, ஊசல். எழுகூற்றிருக்கை, கடிகை வெண்பா, சின்னப்பூ, விருத்த இலக்கணம், முதுகாஞ்சி, இயல் மொழி வாழ்த்து, பெருமங்கலம், பெருங்காப்பியம், காப்பியம்.

◉

மா. பா. சாரதி, திருவல்லிக்கேணி.

"கடன்பட்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற வரி வரும் பாட்டை எழுதி, பொருள், ஆசிரியர் பெயர், நூலின் பெயர் ஆகியவற்றை விளக்குக.

கம்பர் எழுதியதாகக் கூறப்படுவது. இராவணன் போர்க்களத்தில் கலங்கிய நிலையை விரித்துரைப்பது. ஆனால், கம்ப இராமாயணத்தில் இடம்பெறாத பாடல்.தனிப்படையாக மரபு முறையாக வருவது. கடன்பட்டார் பற்றி யாராவது பாட்டை இயற்றி கம்பர்மீது ஏற்றியிருக்கலாம். பாட்டு வருமாறு:

'விடன்கொண்டமீனைப் போலும்
வெந்தழல் மெழுகுபோலும்,
படங்கொண்ட பாந்தள் வாயில்
பற்றிய தேரை போலும்,
திடங்கொண்ட இராமபாணம்
செருக்களத் துற்றபோதில்
கடன்கொண்டார் நெஞ்சம்போலக்,
கலங்கினான் இலங்கைவேந்தன்.'

விடன்கொண்ட மீன்: பாம்பின் நச்சுப்பல் உள்ளேறித் துடிக்கும் மீன்-வெந்தழல் மெழுகு: தீயில் பட்டு உருகும் மெழுகு - படங்கொண்ட பாந்தள் வாயில் பற்றிய தேரை! படமுடைய நல்ல பாம்பின் வாயில் அகப்பட்டு வேதனைப்படும் தேரை (தவளை வகை)-கடன்கொண்டார் நெஞ்சம்:பெருங்கடன் வாங்கிக் கொடுக்கமுடியாமல் திண்டாடும் கடனாளி-இத்தனை பேர் துன்பத்தையும் ஒத்ததாம், சீதை ஆசையால் இராமன் பாணத்துக்கு ஆளாகி (சீதையையும் இலங்கை அரசையும் இழந்து) இலங்கை மன்னன் இராவணன் பட்டபாடு!

தந்தி. "ராஜா". போன் நெ 268

சங்ககால மங்கை!

சங்ககால மங்கையர் கச்சணிந்து கூந்தலுக்கு சந்தனப் புகையும், அகிற்புகையும், ஊட்டி அதைப் பின்னி விட்டிருப்பர். காதில் குழை; கழுத்தில் ஆரம்; கைகளில் ஆம்பல் தண்டால் செய்த தொடி; விரல்களில் மோதிரம் இடையில் மேகலை; காலில் நூபுரம்; சதங்கை முதலிய அணிகள் பூண்டிருந்தனராம்!"

உயர்ந்த நகைகள் - நாணயம் - நம்பிக்கை
இதற்குச் சிறந்த இடம்

பி. ஏ. ராஜு செட்டியார்
சுவர்ண மாளிகை!

வைரம், தங்கம், வெள்ளி, நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் கிடைக்கும் இடம்

Anand

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்

MP

சுவர்ணமாளிகை, கோயமுத்தூர்.